# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 08

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி –07 | 20–03–2004 | சனிக்கிழமை | ஓசை –031



S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத கண்கவர் தங்க நகைகளை சுத்தமான 22 கரட் தங்கத்தில் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

T.P: 024-222 4247

[சி-9281] 077-6059672




- கிளிநொச்சி, வடமராட்சி கிழக்கு வாக்காளருக்கு -

# முகமாலை ராணுவ தடைமுகாம் பகுதியில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்க முடிவு!

## நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

**விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலுள்ள கிளிநொச்சி மற்றும் வடமராட்சி கிழக்கு வாக்காளர்கள் எதிர்வரும் தேர்தலில் வாக்களிக்க ஏதுவாக முகமாலைப் பகுதியில் வாக்களிப்பு நிலையங்களை நிறுவுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது இராணுவத்தினரது சோதனை தடை முகாம்கள் உள்ள பகுதிகளிலேயே இவ் வாக்கெடுப்பு நிலையங்களை நிறுவுவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.**

இதேவேளை, வாக்களிப்பு நிலையங்களை இப்பகுதியில் நிறுவ ஏதுவாக அங்கு நிலைகொண்டுள்ள படையினர் தேர்தல் தினத்தன்று பின்னால் நகர்ந்து நிலை கொண்டிருக்கவும் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைச் சேர்ந்த வாக்காளர்கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய,யாழ். செயலகத்தில் கூட்டப்பட்ட கூட்டத்திலேயே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். தேர்தல் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும், யாழ். அரச அதிபருமான செ. பத்மநாதனால் கூட்டப்பட்டிருந்த இக் கூட்டத்தில் படைத் தரப்பின் சார்பில் மேஜர் ஜெனரல் கே. குலதுங்க மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். விடுதலைப் புலிகளின் சார்பில் யாழ். மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் க. செம்மணன், தமிழீழ நிர்வாக சேவையைச் சேர்ந்த சி. விஜிதரன், ஊடக இணைப்பாளர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## இணைந்த வட கிழக்கு தமிழர் தாயகம்; இதில்மாற்றுக்கருத்துக்கு இடமில்லை

### மட்டு. மாவட்ட முதன்மை வேட்பாளர் ஜோசப்பரராஜசிங்கம்

இணைந்த வடகிழக்கு தமிழர் தாயகம் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை என மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் தெரிவித்தார்.

இது தொடர்பாக பி.பி.சிக்கு அளித்த போட்டியில் தெரிவிக்கும் போது;

கொள்கை ரீதியான முறைகள் நடைமுறைகள் உள்ளன அதன் பிரகாரம் இணைந்த வட-கிழக்குத்தான் தமிழ்ப்பகுதி என்பதை எவரும் மறுக்கமுடியாத அளவுக்கு கொள்கை ரீதியான தமிழ் தேசியம் வளர்க்கப்பட்டுள்ளது.

தந்தை செல்வா காலத்தில் கூட ஒரு சமஷ்டி அமைப்புமுறை இணைந்த வடகிழக்கு தான் தமிழ் தேசம் என்பதில் எந்தவித மாற்றமும் இருக்கவில்லை. பின்பு இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கூட இணைந்த வடகிழக்கென்பது மாற்றப்படவில்லை. அதேபோன்று தான் பண்டா- செல்வா ஒப்பந்தத்தில் கூடவடகிழக்கு இணைப்பு அங்கு காட்டப்பட்டுள்ளது. அது டட்லி-செல்வா ஒப்பந்தத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## இரவில் வீட்டில் தங்கக்கூடாதென படையினர் மிரட்டுகின்றனர்

### ம.உ.ஆ.குழுவிடம் குடும்பஸ்தர் முறையீடு

இரவு நேரங்களில் வீட்டில் தங்கக்கூடாது என படையினர் தம்மை அச்சுறுத்திவருவதாக குடும்பஸ்தர் ஒருவர் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

தெல்லிப்பளைப் பகுதியைச் சேர்ந்தவரான நடராஜா என்பவரால் செய்யப் பட்டுள்ள இம் முறைப்பாடுபற்றி தெரியவருவதாவது; தெல்லிப்பளை பகுதியில் படையினரால் மீளக் குடியமர

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.செயலகம் நோக்கி அடுத்தமாதம் பொங்கு தமிழ் பேரணிக்கு ஏற்பாடு

ஜெனிவாவிலுள்ள ஐ.நா. செயலகம் நோக்கி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5ம் திகதி பொங்கு தமிழ் எழுச்சிப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

☐ தமிழ்த்தேசியம், தமிழர் தாயகம், தன்னாட்சி உரிமை என்பன அங்கீகரிக்கப்படவேண்டும்.

☐ தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் அவர்கள் மீது தடை விதித்துள்ள நாடுகள் அத்தடையை நீக்க வேண்டும்.

☐ அதிஉயர் பாதுகாப்பு வலயம் எனும் பெயரில் சிறிலங்கா படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட மக்கள்குடியிருப்புகளிலிருந்து வெளியேறி அம்மக்களை மீளக்குடியேற அனுமதிக்க வேண்டும்.

☐ தமிழ் கடற்றொழிலாளர்கள் தடையின்றி தமது தொழிலை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவதுடன் அவர்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

☐ தமிழ்மக்களின் பிரதேசங்களில் சிங்களக்குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதை சிறிலங்கா அரசாங்கம் நிறுத்தவேண்டும்.

☐ நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை மேற்கு நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பக் கூடாது.

ஆகிய கோரிக்கைகள் முன் வைக்கப்படவுள்ளன. அனைத்து

(8ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி நினைவுநாள் நேற்று உணர்வெழுச்சியுடன் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

தியாகி அன்னை பூபதியின் 16ம் ஆண்டு நினைவு நாள் நேற்று தமிழர் தாயகம் எங்கும் உணர்வெழுச்சியுடன் கொண்டாடப்பெற்றது.

வீதிகள் இருமருங்கும் மஞ்சள் சிவப்பு வர்ணக்கொடிகளால் அலங்கரிக்கப்பெற்று தியாகி அன்னைபூபதியின்நினைவினை சித்தரிக்கும் பதாகைகள் முக்கிய இடங்களில் தொங்கவிடப்பட்டதுடன் பொது இடங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பிரத்தியேகமாக அமைக்கப்பெற்ற பந்தல்களில் அன்னை பூபதியின் திருவுருவப் படங்கள் வைக்கப்பெற்று ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தி அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றன.

நேற்று காலை 9.00 மணிக்கு கிளிநொச்சியிலமைந்துள்ள தமிழீழ காவல்த்துறையின் நடுவப்பணியகத்தில் கண்காணிப்பாளர் மாதவன் தலைமையில் மேற்படி நிகழ்வுகள் இடம் பெற்றன.

(8ஆம் பக்கம் பார்க்க)

## அரச மருத்துவர் போராட்டம் நேற்று முடிவுக்கு வந்தது

(கொழும்பு)

அரசாங்க மருத்துவர்கள் கடந்த 11 ஆம் திகதியிலிருந்து நடத்தி வந்த சம்பள முரண்பாட்டு கோரிக்கை சம்பந்தமான பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நேற்று நண்பகலுடன் முடிவுக்கு வந்தது. அமைச்சர் கே.என். சொக்ஸி இந்த சம்பள முரண்பாடுதொடர்பில் குழு ஒன்றை நியமிக்க இணங்கியமையும் சனாதிபதி நேரடியாக இந்த விடயத்தில் தலையீடு செய்தமையையும் அடுத்தே இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முடிவுக்கு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

(32)

## அன்னை பூபதியின் தியாகம் மலர்ந்த மாமாங்கத்தில் இன்று ஒரு துரோகத்தனம் முளைவிட்டிருக்கிறது

### அன்னை பூபதி நினைவுநாள் உரையில் கரிகாலன்

அன்னை பூபதியின் தியாகம் மலர்ந்திருக்கின்ற மாமாங்கத் திருத்தலத்திலே இன்று ஒரு துரோகத்தனம் முளைவிட்டிருக்கிறது. இந்த துரோகத்தனத்துக்கு துணை போவதற்கு மக்கள் தயாராக இல்லாத போதிலும் ஆயுத முனையில் அங்கே மக்களை பயன்படுத்துகின்ற ஒரு அவல நிலை நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் கரிகாலன் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை 9.00 மணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவப்பணிமனையில் நடைபெற்ற தியாகி அன்னை பூபதி அவர்களின் 16 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்து சிறப்புரையாற்றுகையிலேயே இதனைத்தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்; அன்னை பூபதி ஆகுதி ஆகி ஆண்டுகள் பதினாறைக் கடந்து விட்ட போதும், நினைவுகள் இன்னமும் எம்மைவிட்டு நீங்கவில்லை. அன்று இந்திய இராணுவம் எமது விடுதலைப்போராட்டத்தையும்

(8ஆம் பக்கம் பார்க்க)



ஈகச்சுடரினை கௌசல்யன் ஏற்றுகிறார்.

## வீரவணக்கம்

நேற்று முன்தினம் சுகயீனம் காரணமாகப் போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

மேஜர் மோகன் (அருள்ராசா ஜெசிக்குமார், காந்தி வீதி கொக்குவில் மேற்கு யாழ்ப்பாணம் த.மு:யூனியன் குளம் சந்தி, அக்கராயன் கிளிநொச்சி) என்பவரே சாவடைந்தவராவார்.

இம்மாவீரருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# நெருக்கடியான காலத்தில் பணிபுரிந்த சுகாதாரத் தொண்டர்களை நிரந்தரமாக்குக

## தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் கோரிக்கை

சுகாதாரத் தொண்டர்களை ஏதாவது நியமனத்தில் நிரந்தரமாக்கும்படி தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் வடக்கு கிழக்கு சுதேச வைத்தியத்துறை அமைச்சை கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

வடக்கு கிழக்கு பகுதிகளில் யுத்த காலங்களில் பல வைத்தியசாலைகளிலும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் நிரந்தர பணியாளர்களுக்கு மிகுந்த பற்றாக்குறை நிலவிய காரணத்தினால் அங்கு நோயாளர்களைப் பராமரிப்பதில் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்ட வேளை மாவட்டங்களின்சுகாதார திணைக்கள தலைவர்களினதும் அரச அதிபர்களின் ஒப்புதலுடனும் மற்றும் எமது ஒத்துழைப்புடனும் சில அரசசார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடனும் சுகாதார வைத்திய சேவையில் பல வழிகளிலும் நின்று உதவக்கூடிய வகையில் சுகாதார தொண்டர்களாக எடுத்து பயிற்சிகள் வழங்கப்பட்டு குறிப்பாக 1995 ஆம் ஆண்டில் இருந்து கொடுப்பனவுகள் கூட சரியாக வழங்கப்படாமல் இரவு பகலாக உற்சாகத்துடன் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் குணப்படுத்தலிலும் வரும்முன் காத்தலிலும் உள்ள வைத்தியர்கள் மற்றும் முக்கிய பணியாளர்களுக்கு முதுகெலும்பாக உள்ளனர் என்பதையும் இங்கு குறிப்பிடலாம். மருத்துவ மாதுக்களின் பற்றாக்குறை இருந்தபோதெல்லாம் இவர்களின் பணி இன்றியமையாததாக இருந்து கொண்டிருக்கின்றது. புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்ட காலத்தில் இருந்து தங்களுக்கு ஊடாகவும் இங்கு பல முறைகள் வந்த வேளைகளிலும் சுகாதார அமைச்சின் செயலாளர் அவர்களிடமும் மற்றும் தங்களிடமும் வடக்கு கிழக்கின் சுகாதார அபிவிருத்திக்கு ஆலோசகராக இருக்கும் பொறுப்பதிகாரியுடனும் இந்த சுகாதார தொண்டர்களை அவர்களின் வாழ்வாதாரத்திற்கு அவர்களின் தகுதியின் அடிப்படையில் நிரந்தர சேவையில் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டியிருந்தோம். இத்தொண்டர்களும் தங்களை நிரந்தரமாக்குமாறு பலமுறை கடிதங்கள் வாயிலாகவும் அமைதியான போராட்டங்களின் வாயிலாகவும் தெரியப்படுத்தியிருந்தனர். தற்போது வடக்குக் கிழக்கில் வைத்தியர்கள் உட்பட ஏனைய பணியாளர்களின் பற்றாக்குறை மிக அதிகமாக இருப்பதையும் தாங்கள் அறிவீர்கள். அண்மையில் பலருடைய பல தடவை வேண்டுகைக்கு அமைவாக க.பொ.த. சாதாரண தரத்தில் குறிப்பிட்ட சித்திக்கமைவாக மருத்துவமாது பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்யவுள்ளதாக அறிகிறோம். அதில் இவர் களுக்கு முன்னுரிமை அளிப்பீர்கள் என நம்புகின்றேன். இது சம்பந்தமாக தங்களிடம் நேரிலும் கடிதங்கள் வாயிலாகவும் தெரியப்படுத்தியும் இருந்தேன். எனவே இப்பயிற்சி நெறிக்கு கல்வித்தகுதி காணா திருக்கும் மிகுதியாக இருப்பவர்களையும் வேறுபணிகளில் நிரந்தரமாக்க அல்லது தற்காலிக நியமனங்களில் சேர்த்துக்கொள்ள விரைவாக நடவடிக்கை எடுத்துதவுமாறு தங்களை அனைவருடைய சார்பாகவும் அன்பாக வேண்டிக கொள்கின்றேன்.

# புளியங்குளம் தெற்குப் பகுதி மக்கள் தேவைகள் பற்றி மதிப்பீடு

(வவுனியா)

வவுனியா டெனிஸ் அகதிகள் பேரவையின் நிதி உதவியுடன் வவுனியா மாவட்ட தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினால் புளியங்குளம் தெற்கு பகுதியில் கிராம அபிவிருத்தித் திட்டங்களின் முதலாம் கட்டம் பூர்த்தியடைந்துள்ளது. 2ஆம் கட்ட வேலைகளின் தேவைகளை மக்களிடம் இருந்து அறிந்து கொள்வதற்காக கடந்த 15ஆம் திகதி பொதுமக்கள் புளியங்குளம் தெற்கு கிராமத்தின் செய்முறை மதிப்பீட்டில் முழு நாளாக கலந்து கொண்டு தங்கள் தேவைகளைச் சுட்டிக்காட்டினர்.

மதிப்பீட்டு நிகழ்வின்போது வவுனியா மாவட்ட டெனிஸ் அகதிகள் பேரவையின் பிரதிநிதிகள், வவுனியா மாவட்ட த.பு. கழக திட்ட இணைப்பாளர் த. தயானந்தன், வெளிக்கள பணியாளர்கள் கலந்து கொண்டார்கள்.

மதிப்பீட்டிலிருந்து வீதி திருத்தம், குடிநீர் வசதி ஏற்படுத்தல், பாதுகாப்பு அரண் அமைத்தல், சுழற்சி முறையில் கடன் வசதி வழங்கள், முன்பள்ளிகளை அமைத்தல் போன்ற தேவைகள் இனங்காணப்பட்டு 2ஆம் கட்ட திட்டத்தில் நடைமுறைப் படுத்துவதற்கு திட்டமிடப்பட் டுள்ளது.

# தீவகத்தில் தேர்தல் குறித்து இல்லத்தரிசிப்புகள் நாளை ஆரம்பம்

யாழ். தீவக தேசிய எழுச்சிப் பேரவையினரும் தீவகக்கேட்ட அரசியல்துறையினரும் இணைந்து தொடர் இல்லத்தரிசிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

எதிர்வரும் தேர்தல்காலத்தில் மக்கள் கடைப்பிடிக்கவேண்டிய கொள்கைகள் பற்றியும், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர்க்கு ஆதரவு வழங்க வேண்டியதன் அவசியம் பற்றியும், மாற்றுக் கருத்துக்களை திணித்து குழப்பங்களை உருவாக்கமுயலும் தேச விரோத சக்திகள் குறித்து மக்கள் விழிப்பாக இருத்தலின் அவசியங்கள் பற்றியும் இதன்போது மக்களுக்கு கருத்துக்கள் வழங்கப்படும்.

நாளை தொடக்கம் 28ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளஇவ் இல்லத்தரிசிப்பு செயற்றிட்டத்தில் போராளிகள்,தேசிய எழுச்சிப் பேரவை பிரதிநிதிகள் ஆகி யோர் வீடுதோறும் சென்று கருத்துப் பகிர்வுகளை நடத்துவர். (33)

# பாராளுமன்ற பொதுத்தேர்தல் தொடர்பான கலந்துரையாடல்

எதிர்வரும் 02.04.2004 அன்று நடைபெறவுள்ள இலங்கைப் பாராளுமன்றப்பொதுத்தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் முல்லைத்தீவு கச்சேரி மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 22.03.2004 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளதால் புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு ஆகிய பகுதி உதவி அரசாங்க அதிபர்களும் தமது பிரிவுகளில் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள கிராம அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு முல்லை. மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கேட்டுக்கொள்கின்றார்.

நடைபெறவுள்ள தேர்தலின் முக்கியத்துவம் தொடர்பாகவும் மக்கள் எவ்வாறு எந்தெந்த இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (20)

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சமகால அரசியல் கருத்தரங்கு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பான கருத்தரங்கு நடைபெற்றுவருகின்றது.

மேற்படி கருத்தரங்கானது நேற்று முன்தினம் முத்தையன்கட்டு கரை அ.த.க.பாடசாலை மண்டபத்தில் ஒட்டுசுட்டான் ,கோட்ட தேசிய எழுச்சிபேரவை செயலாளர் தயாபரன் தலைமையில் மு.ப.10.00 மணிக்கு ஆரம்பமானது.மேற்படி கருத்தரங்கில் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக்கொடியினை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்ததை அடுத்து நிகழ்வின் தலைவரின் தலைமையுரை இடம் பெற்று கருத்துக்களை முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சி பேரவை ஊடகப் பேச்சாளர் வேதவனம் தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர் ச.கனகரத்தினம் அப்பகுதி கிராமசேவையாளர் சோமசுந்தரம், தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதே நாள் பி.ப. 3.00 மணிக்கு கற்சிலைமடு மகாவித்தியாலய மண்டபத்தில் மகாவித்தியாலய அதிபர் அருமைச்சந்திரன் தலைமையில் சமகால அரசியல் கருத்தரங்கு நடைபெற்றது.

மேற்படி கருத்தரங்கில் பொதுச்சுடரினை தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் ஏற்றிவைக்க முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் தமிழீழ தேசியக் கொடியினை ஏற்றிவைத்ததையடுத்து அகவணக்கத்துடன் கருத்துரைகள் ஆரம்பமாகி கருத்துரைகளை முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் முல்லைத்தீவு மாவட்ட தே.எ.பேரவை ஊடக போச்சாளர் வேதவனம் முல்லை மாவட்ட தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர் சதாசிவம் கனகரத்தினம் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைநிதிப் பொறுப்பாளர் ஆதவன் வைத்தியர் நா.வைத்திலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். (ஆ)

## விளையாட்டு விழா

பூநகரி பிரதேச செயலர் பிரிவு கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா இன்றும் நாளையும் பூநகரி நல்லூர் எவரெடிவிளையாட்டுமைதானத்தில் நடைபெறவுள்ளது.

பூநகரி பிரதேச செயலர் க.வைரமுத்து தலைமையில் நடைபெறவுள்ளமேற்படி விழாவின் நாளைய நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளி.மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் கலந்து கொண்டு வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கிகௌரவிக்கவுள்ளாரென போட்டியின் முகாமையாளர் க.புவனேந்திரராசா தெரிவித்துள்ளார். வெற்றியாளர்களுக்கு வழங்கவென தங்கப்பரிசுகளை ஜெயபுரம் சிவா, ஆலங்கேணி ஐயம்பிள்ளை, செல்விபுரம் தங்கராசா ஆகியோர் அன்பளிப்பு செய்துள்ளனர். (சோ)

-விடத்தல்தீவு கடற்பகுதியில்-

# அத்துமீறி மீன்பிடித்த இந். படகுகள் மீனவர்களால் பிடிக்கப்பட்டன

மன்னார் விடத்தல் தீவு தாயக கடல் எல்லைப்பகுதியில் அத்துமீறி நுழைந்த இரண்டு இந்திய மீன்பிடிப்படகுகளையும் அதில் பயணித்த 8 பேரையும் விடத்தல் தீவு மீனவர்கள் பிடித்து மீனவர் சங்கத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது நேற்று முன்தினம் இராமேஸ்வரத்திலிருந்து வருகை தந்த இவர்கள் விடத்தல் தீவு மீனவர்களின் வலைகளை வெட்டி சேதமாக்கிய வேளையே பிடிபட்டனர். இரண்டு படகுகளில் இவர்கள்வந்தமை குறிப்பிடத் தக்கது. (மி)


# பொதுக் கூட்டம் 2004

திருவருள் மிகு இரணைமடு -கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவில் அறங்காவலர் சபை பொதுக் கூட்டம் 21.03.2004 ஞாயிறு காலை 10.00 மணிக்கு தலைவர் திரு சு.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. அடியவர்களை கலந்து ஆலய வளர்ச்சிக்கு உதவ வேண்டுகின்றோம்.

ந.செல்வராசா
செயலாளர்
அறங்காவலர்சபை.

(4330)



# அரசாங்க அறிவித்தல்

## பாராளுமன்றத் தேர்தல்-2004.04.02

### கனிஷ்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்கான/வாக்களிப்பு எழுதுநர்களுக்கான

# அறிவுறுத்தல் கூட்டம்

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் 2004 தொடர்பாக நடைபெறவுள்ள மேற்படி கூட்டங்கள் பின்வரும் இடங்களில் அவற்றுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களில் நடைபெறவுள்ளன. இவற்றிற்கான அறிவித்தல்கள் ஏற்கனவே சகல கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் / வாக்களிப்பு எழுது நர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே அறிவிக் கப்பட்ட தற்கமைய குறிப்பிட்ட திகதியில் உரிய நேரத்தில் தவறாது அவர்களைப் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

| | |
|---|---|
| 1. யாழ். இந்துக்கல்லூரி | - 2004.03.20-காலை 9.30/மாலை 2.00 மணி |
| 2. இராமநாதன் கல்லூரி | - 2004.03.21-காலை 9.30/மாலை 2.00 மணி |
| 3. மானிப்பாய் இந்துக்கல்லூரி | - 2004.03.20-காலை 9.30/மாலை 2.00 மணி |
| 4. சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி | - 2004.03.21-காலை 9.30/மாலை 2.00 மணி |
| 5. சாவகச்சேரி இந்துக்கல்லூரி | - 2004.03.20-காலை 9.30/மாலை 2.00 மணி |
| 6. வேலணை சரஸ்வதி வித்தியாலயம் | - 2004.03.21-காலை 9.30/மாலை 2.00 மணி |
| 7. வட இந்து மகளிர் கல்லூரி | - 2004.03.20-காலை 9.30/மாலை 2.00 மணி |
| 8. நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் | - 2004.03.21-காலை 9.30/மாலை 2.00 மணி |
| 9. கிளிநொச்சி மகாவித்தியாலயம் | - 2004.03.20-காலை 9.30/மாலை 2.00 மணி |

(சி-9338)



# முக்கிய அறிவித்தல்

## ஆற்று மணல் அகழ்ந்து எடுத்தல் புதுக்குடியிருப்பு பிரதேச சபை

22.03.2004 முதல் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் எல்லைக்குள் கீழ் காட்டப்படும் ஆற்றுப் படுக்கைகளில் மட்டுமே ஆற்று மணல் அகழ்ந்து கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. கீழ் குறிப்பிடப்படும் ஆற்றுப் படுக்கைகள் தவிர்ந்த, வேறு இடங்களில், மண் அகழ்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

01. மூங்கிலாறு
02. நெத்தலியாறு
03. பேராறு (கெரிடமடு)
04. மேளிவனம் ஆறு (9ஆம் கட்டை)
05. சம்மளங்குளம் ஆறு
06. கனகராஜன் ஆறு
07. தேராவில் குளப்பகுதி-(பூச்சு மணல்)

இவ்விடங்களில் மணல் அகழ்ந்து ஏற்றுவதற்கு முன்பு, புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குரிய வழி அனுமதி உரிமக் கட்டணத்தைச் செலுத்தி, பற்றுச்சீட்டைப்பெற்றுக்கொள்ளவேண்டும். இப்பற்றுச்சீட்டைபரிசோதனை செய்வதற்கான அதிகாரம், காவல்துறை, கிராமஅலுவலர், பிரதேச சபை அலுவலர், நிர்வாகசேவை அலுவலர் மற்றும் சுற்றுச் சூழல் அமைப்பின் அலுவலர் அகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அனுமதி பெறாது மணல் ஏற்றமுயற்சித்தல், கொண்டு செல்லல் போன்றவற்றுக்கு எதிராக தண்டப் பணம் 500.00 ரூபா அந்த இடத்திலேயே அறவிடப்படும் என்பதனையும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

காலை 8.00மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை புதுக்குடியிருப்பு பிரதேச சபையிலும், ஒட்டுசுட்டான் உப அலுவலகத்திலும் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். விடுமுறை நாட்களில் அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது.

பொது மக்களும் நிறுவனங்களும் இவ் விடயத்தில் ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

செ.தயானந்தா
விசேட ஆணையாளர்,
புதுக்குடியிருப்பு,
பிரதேச சபை.

(4061)

# சேபிய-அல்பேனியருக்கிடையிலான மோதலைக் கட்டுப்படுத்த கொசோவாவில் நேட்டோ படையின் எண்ணிக்கை அதிகரிப்பு

(லண்டன்)

**சேபியர்களுக்கும், அல்பேனியர்களுக்குமிடையே இடம்பெறும் மோதலைக் கட்டுப்படுத்துவதற்காக கொசோவாவிற்கு அனுப்பப்பட்ட நேட்டோ அமைதிப்படையின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.**

நேட்டோவின் கட்டுப்பாட்டில் அமைந்துள்ள இப்பிரதேசத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் 22பேர்வரை கொல்லப்பட்டதாவும், 500பேர்வரை காயப் பட்டுள்ளதாகவும், புறுசெலில் அமைந்துள்ள நேட்டோ தலைமைச்செயலகம் தெரிவித்துள்ளது.

முதலில் நேட்டோவின் 150 அமெரிக்கத் துருப்பினர் அனுப்பப்பட்டனர். மேலும் துருப்புக்கள் ஆயிரமாக அதிகரிக்கப்பட்டுளளது.

இதனிடையே நேட்டோ படையினர் 1999ஆம் ஆண்டு அல்பேனியர்கள், சேபியர்கள் மத்தியில் நடைபெற்ற போரைக் கட்டுப்படுத்துவதற்காக அனுப்பப்பட்டிருந்தனர். தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட வன்முறைகள் தொடர்பாக தெரிவிக்கப்பட்டதாவது;

கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான வன்செயல்களின் போது சேபிய இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்காயத்திற்கு உள்ளாகிக் காயமடைந்துள்ளார்.

இதனை அடுத்து ஆத்திரமடைந்ததாகக் கூறப்படும் சேபியர்கள் மூன்று அல்பேனியச் சிறுவர்களைக் கொடூரமாக ஆற்றில் மூழ்கடித்து கொலை செய்துள்ளனர்.

இதன் தொடராக அல்பேனியர்களினால் சேபியத் தேவாலயங்களுக்கு புதன்கிழமை தீவைக்கப்பட்டது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில; அல்பேனியர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசத்தில் மேலும் வன்செயல்கள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்தப் பகுதியில் அமைதியை நிலைநாட்டவென நேட்டோ ஸ்தாபனம் அதன் நடவடிக்கைகளைப் பலப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதற்கமைய அந்த ஸ்தாபனம் தனது வீரர்களின் எண்ணிக்கையை ஆயிரமாக அதிகரித்துள்ளது. இதேவேளை சேபியாவின் பிரதம பிரதிநிதி ஜெகில்யா இதுபற்றித் தெரிவிக்கையில், இந்த வன்செயல்கள் அனைத்தும் ஏற்கனவே திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன என்று தெரிவித்ததுடன் கொசோவோலில் நடைபெறும் இறுதித் தாக்குதல் இதுவாக இருக்குமென்றும் அந்நாட்டில் சேபியர்களின் எதிர்காலம் பற்றி இந்தத் தாக்குதலே தீர்மானிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொசோவோ பாராளுமன்றத்தில் மூன்று பிரதான அல்பேனியக் கட்சிகளின் பிரதிநிதிகள் உரை நிகழ்த்துகையில் அந்நாட்டைச் சுதந்திரநாடாகப் பிரகடனம் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்று தெரிவித்துள்ளார்கள்.

இந்த முடிவை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இதுவரை அங்கீகரிக்கவில்லை.



இந்தோனேசியா மேற்கு யாவாவில் "காகஸ் பிளவர்" என அழைக்கப்படும் இப் பூ அங்குள்ள பூங்காவில் மலர்ந்துள்ளது. இது 9.5அடி உயரம் கொண்டதும் அழுகிய மாமிச மணத்தைக் கொண்டதுமாகும். அத்துடன் இது மிக அரிதாகவே காணப்படுவதாக கூறப்படுகிறது. இப் பூ உலகிலேயே மிக உயரமான பூவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.



ஈராக்கிற்கு துருப்புக்களை அனுப்ப தென்கொரியா எடுத்த முடிவுக்கு எதிராக தென்கொரியாவில் நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதனையடுத்து இத்திட்டத்தைத் தென்கொரியா கைவிட்டது.

# அல்-அரபியா தொலைக்காட்சி நிலைய படப் பிடிப்பாளர் ஈராக்கில் சுட்டுக்கொலை

***சோதனைச் சாவடியில் நிற்காமல் சென்றதால் சுடப்பட்டதாக அமெ. விளக்கம்***

(பாக்தாத்)

ஈராக்கின் ஊடகவியலாளர் ஒருவரை அமெரிக்க இராணுவத்தினர் சுட்டுக்கொன்றுள்ளனர்.

பாக்தாத்தின் மத்திய பகுதியில் வைத்தே இந்த ஊடகவியலாளர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவர் துபாயில் இருந்து செயற்படும் அல்-அரபியா செய்மதித் தொலைக்காட்சி நிலையப் படப்பிடிப்பாளர் என செய்திகள் தெரிவித்துள்ளன. இச்சம்பவம் பற்றி அமெரிக்க இராணுவம் தெரிவிக்கையில், சோதனைச் சாவடியில் சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர் சென்ற மோட்டார் வாகனம் நிறுத்தப்படாததினால் தாங்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது எனத் தெரிவித்துள்ளனர்.

ஒரு வருடத்திற்கு முன்னர் ஈராக்கிய யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து இதுவரை நான்கு ஊடகவியலாளர்கள் அமெரிக்க இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தாய்வான் சனாதிபதி, உபசனாதிபதி துப்பாக்கிச் சூட்டில் காயம்

(பாங்கொக்)

தாய்வானின் சனாதிபதியும், உப சனாதிபதியும் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளனர்.

தாய்வானின் சனாதிபதித் தேர்தல் இன்று நடைபெறவுள்ள நிலையில் நேற்று தாய்வானின் தெற்கு பகுதி நகர் ஒன்றில் திறந்த வாகனம் ஒன்றில் சென்றவாறு சனாதிபதியும், உப சனாதிபதியும் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தபோதே துப்பாக்கித் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

இதன்போது சனாதிபதிக்கு வயிற்றுப் பகுதியிலும், உப சனாதிபதிக்கு முழங்காளிலும் துப்பாக்கி ரவைகள் துளைத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த 54 வயதுடைய சனாதிபதி அவரது சொந்த நகரில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, தாக்குதல் நடத்தியவர்கள் என சந்தேகிக்கப்படும் எவரும் இதுவரை கைது செய்யப்படாத நிலையில் திட்டமிட்டபடி தேர்தல் இன்று நடைபெறும் என அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

# பாரதிய ஜனதா அரசியல் அங்கம் வகிக்க சந்திரபாபு நாயுடுவிற்கு அத்வானி அழைப்பு

(புதுடில்லி)

பாரதிய ஜனதா கட்சிதலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசில் இடம் பெறவேண்டும் என்று ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவுக்கு இந்தியத்துணைப் பிரதமர் எல்.கே. அத்வானி அழைப்பு விடுத்துள்ளார்.

ஹைதராபாத்தில் புதன்கிழமை செய்தியாளர் களிடம் பேட்டியின் போது அவர் அதனைக் கூறியுள்ளார்.

பா.ஜ.க.வின்முக்கிய கூட்டணிக் கட்சியாக சந்திரபாபு நாயுடு தலைமையிலான தெலுங்கு தேசம் கட்சி இருந்து வருகிறது.எனவே பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசிலும் அக்கட்சி அங்கம் வகிக்க வேண்டும்.

இதன் மூலம் வாஜ்பாய் தலைமையிலான மத்தியரசிலும் சேர வேண்டும் என்பது எனது வேண்டுகோள். சந்திரபாபு நாயுடுவை புதன்கிழமை நேரில் சந்தித்து எனது வேண்டுகோளைத் தெரிவித்தேன்.இக் கோரிக்கையை ஏற்பது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கும் என்றும் அவரிடம் கூறியுள்ளேன்.

இவ்வாறு அத்வானி செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

# மாலைதீவில் படகு நீரில் மூழ்கியது உதைபந்தாட்ட ரசிகர்கள் 15 பேர் பலி

நூற்றுக்கு மேற்பட்ட உதைப்பந்தாட்ட ரசிகர்கள் பிரயாணம் செய்த படகு நீரில் மூழ்கியுள்ளது. இதில் 15 பேர் வரை உயிரிழந்துள்ளார்கள்.

இந்த விபத்து புதன்கிழமை மாலைதீவின் திலாபேடோ எனும் சிறுதீவில் நிகழ்ந்துள்ளது. உயிரிழந்தவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் மீட்கப்பட்ட உடல்களில் சிறுவர்களும் அடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்தில் மூழ்கியவர்களில் 100 பேர்வரை உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மாலை தீவில் 1192க்கு மேற்பட்ட பவளப்பாறைகள் கொண்ட சிறு தீவுகள் காணப்படுகின்றன.இதனால் உல்லாசப் பிரயாணிகள் உலகின் பல பாகங்களிலிருந்தும் இத் தீவுகளுக்குப் பிரயாணம் மேற்கொள்வது வழமை.



பாக்தாத்தில் ஜார்க்குண்டு வெடிப்பில் சேதமடைந்துள்ள கட்டடம்.



அவுஸ்திரேலியாவின் வடக்கே குரண்டா என்னுமிடத்தில் விலங்குகள் பாதுகாக்கப்படும் நிலையம் ஒன்றில் காணப்படும் ஒருவகை வெளவால். இவ்வினம் உலகில் மிக அரிதாகக் காணப்படுவதாகும். இங்கு, படத்தில் காணப்படும் வெளவால் 4மாத வயதைக் கொண்டதும் 6கிறாம் நிறையைக் கொண்டதுமாகும்.

# பேன்களால் எழும் பாதிப்புக்கள்

ஜெர்மனிய லிப்சிக் பல்கலைக் கழகத்தின் மனித பரிணாம வளர்ச்சி பீடத்தில் பணியாற்றும் விஞ்ஞானியான மார்க்ஸ்ரோன் கிங் பேனின் ஆரம்பம் அதன் பரிணாம வளர்ச்சி என்பன பற்றிய தகவல்களை வெளியிட்டிருக் கிறார்.

அவரின் விஞ்ஞான ஆய்வுகள் மூலம் பேனின் வாழ்கைவட்டம் ஆயுட்காலம், செயற்பாடு தொடர் பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவரின் கூற்றுப்படி பேன் ''ப்ராக்'' வரலாற்று யுகத்தைச் சேர்ந்த மனித இனம் ஆடை யணியத் தொடங்கிய காலத்தில் தோன்றியதாகக் கருதப்படுகிது. அதுஒரு சிறிய பறக்கக்கூடிய தட்டையான வடிவமைப்பைக் கொண்ட பூச்சியாகும். விலங்கி யல் விஞ்ஞானத்தின்படி "ஆத்ரா பொடா" இனத்தைச் சேர்ந்தவை என கூறப்படுகிறது. இவற்றில் தலைப்பேன்,சேலைப்பேன் என் பவை " பெடிகியூலஸ்" எனவும, வறியுமானுஸ் இனத்தைச் சேர்ந் தவையெனவும் கண்டறியப்பட் டுள்ளது.

இவை 3மி.மீற்றர் நீளமும் ஒரு மி.மீ. அகலமும் கொண்டவை யாகும். சாம்பல் நிறத்தைக் கொண்ட இதன் உடல், தலை, கழுத்து, வயிறு என மூன்று பிரிவுகளைக் கொண்டவை யாகும். கழுத்துப்பகுதியில் 3சோடி கால்கள் காணப்படுவதோடு அவை எதனையும் பற்றிக் கொள்ள உதவியாக அமைந்துள்ளன.

இவ்வினங்களைவிட உருவத் தில் உருண்டையான சாம்பல் நிறத துடன் கூடிய மண்ணிற வகை பேன களும் இருப்பதாக கூறப்படுகிறது.

இவை பார்வைக்கு சிலந்தியைப போன்றிருப்பதால் சிலந்திப்பேன் எனவும் கூறப்படுகிறது. இதன் பெண்ணினம் அதன் ஒரு மாத ஆயுட்காலத்தில் 200 முட்டை களை இடும். இம்முட்டைகள் அவற றின் ஒட்டும் திரவங்களின் உதவி யுடன் மயிர்களில் ஒட்டி விடுகின் றன இவையே இருவாரங்களில் ஈர்களாகவும், பேன்களாகவும் மாறுகின்றன.

மனிதர்களில் பரவும் இப் பேனி னம் தலையில் இருந்து போசித்து வாழும்.

இப்பேன்கள் தலையில் தோலைக கடித்து ஊசி போன்ற தனது உறுப்பை பயன்படுத்தி இரத் தத்தை உறிஞ்சுகின்றன. பேன் கடிக்கும் போது எரிவது போல் உணரப்படுவது அதன் ஒருவகை திரவத்தை உமிழ்வதனாலேயே எனவும் மேற்படி விஞ்ஞானியின் கூற்று கூறுகின்றது.

ஏதாவது தொற்று நோய் கண்ட ஒருவரை தொற்றியுள்ள பேன் சுகதேகி ஒருவரில் பரவும்போது அவரின் குருதியின் மூலம் நோய்க்கிருமிகள் பரவி நோயை ஏற்படுத்தும் அபாயமும் இருக்கி றது. இவற்றைவிட நோய்ப்பர வலைத் தீவிரமாக்கும் சேலைப் பேன் அல்லது ஆடைப்பேன் என் பனவும் மனிதருக்கு தொல்லை கொடுப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இவற்றின் மூலமே தைபொயிட் காய்ச்சல் பரவுவதாகவும் கூறப் படுகின்றது.

ஆதிகாலந்தொட்டு லட்சக் கணக்கில் இக்காய்ச்சலினால் பலியானமை குறிப்பிடத்தக்கது. முதலாம், இரண்டாம் உலகப் போரின் போது பலலட்சக் கணக்கில் போர்வீரர்கள் மடிந்தும் தைபொயிட் காய்ச்சலினாலேயே. ஆகவே தினந்தோறும் ஆடைகளை மாற்றி சுத்தப்படுத்தி அணிவதன் மூலம் இப்பேன் வகைகளைக் கட்டுப்படுத்த முடியும்.

# கடலுக்கடியில் படமெடுக்கும் நவீன புகைப்படக் கருவி



கடலுக்கடியில் படமெடுக்கப் பயன்படும் நவீன புகைப்படக் கருவிகள் பலவகையுண்டு. இவற் றில R.O.V (Remotely operatad vehicle) என்னும் ஒருவகை புகைப்படக்கருவி கடலுக்கடியில் ஆராய்ட்சி செய்யும் ஆராய்ச்சியாளா களுக்கு மிகவும் பயனுடையதாக இருக்கின்றது.

இது ஒரு சிறிய நீர்மூழ்கிக் கப்பல் என்று அழைக்கப் படுகின்றது. இந்தக்கருவியில் வீடியோ கமிராக்களும் ஸ்டில் கமிராக்களும் பவர்ஃபுல் விளக்கு களுடனும் பொருத்தப்பட்டுள்ளது.

செய்திகளை வாங்கி அனுப்ப "Acoustic Transmeter" கருவி யும் இருக்கின்றது. இந்தவகை கமிராக்களைக் கப்பலில் இருந்த படியே ரிமோட்மூலம் இயங்கச் செய்து எதைப்படமெடுக்க வேண்டுமோ அந்தப் பகுதிக்கு இயக்கிச் சென்று துல்லியமாக படம் பதிவு செய்ய முடியும்.

இந்தக்கருவியில் லேசர்பீம் பாய்ந்து, கடலின் ஆழத்தில் மேடு, பள்ளமான பகுதிகளை பிரதி பலித்து திரையில் 3D படமாகக் காட்டும் திறன் உடையது.

# விண்வெளி வீரருக்கு விண்கலத்தில் பயிற்சி



அமெரிக்கா செவ்வாய் கிரகத் துக்கு மனிதனை அனுப்புவதில் ஆர்வம் காட்டுகின்றது. ஆனால் அதில் பல சிக்கல்களையும் எதிா நோக்குகின்றது.

முதலில் சந்திர மண்டலத்துக்கு ஒரு வழிப் போக்கு நிலையம் அமைக்க வேண்டும். அங்கே ரொக கெட்டுகளைப் பாகம் பாகமாகக் கொண்டுசென்று, பின்னர் அதனை ஒன்றி னைத்து அங்கிருந்து ஏவினால மட்டுமே சாத்தியப்படும்.

ஆனால் சந்திர மண்டலத் துக்கு மனிதர்களை அனுப்ப வேண்டுமென்றாலே செல்லும் விஞ்ஞானிகளுக்கு பல பயிற்சி தேவைப்படுகின்றது.

அப்படி இருக்கும் போது வேற்றுக கிரகத்துக்குச் செல்வதானால் வருடக் கணக்கில் பயணம் செய்ய வேண்டும். அந்த அதிவேகப் பயணத்துக்கு மனிதன் எவ்வாறு பயிற்சி மேற்கொள்வது என்பதுடன், மனித இனத்துக்கு அதிவேக பயணம ஒத்துவருமா...என்பதும் சந்தேகம்.

அடுத்து motion sickness என்பது விண்வெளி வீரர்களுக்கு ஒரு பிரச்சினை. புவியீப்பு விசையை ஆதாரமாகக் கொண்டு நம் காது களின் உட்பகுதியில் இயங்கும் திரவம், மூளைக்குச் செய்தி அனுப்பி, நாம் நேராக நடக்க நிலையாக இருக்க நம்மைச் செயற்படுத்துகின்றது.

விண்வெளிப் பயணத்தின் போது, இந்த ஈர்ப்பு விசையிலிருந்து விஞ்ஞானிகள் விடுபடுவதால் காது திரவத்தின் சமநிலை மாறி மேல்-கீழ் எதுவென்ற பிரச்சினையில் மூளையில் குழப்பம் ஏற்படு கின்றது. இது தான் motion sickness ஆகும்.

இவையனைத்துமே செவ்வாய் கிரகத்துக்கு மனிதனை அனுப்பு வதில் உள்ள சிக்கலாகவுள்ளது.


# தெரிந்துகொள்ள

* இரண்டாம் உலகப் போரின் போது ஜேர்மனி 1945ஆம் ஆண்டு 11வது மாதம், 11ஆம் திகதி, 11மணி 11நிமிடம் 11 வினாடிகளின் போது சரணடைந்தது.

* பூச்சியினத்தில் தரையில் அதிவேகத்துடன் ஓடுவது கரப்பான் பூச்சிதான். இதன்வேகம் மணிக்கு 5கி.மீற்றர் ஆகும்.

* கடலின் அடித்தளத்தில் வாழும் மீனினம் ஆங்கலர் என்பதாகும். இந்த மீனினம் தனது திறந்த வாயிலிருந்து வெளிவரும் ஒளியின் உதவியால் இரையை ஈர்க்கக் கூடிய தன்மை பெற்றது.

12.1 அங்குல திரையைக் கொண்டதும் பல ஒளிபரப்பு அலைவரிசையைக் கொண்டதும், இணையதளதொழில் நுட்பத்திறன் கொண்டதுமான ''எயார்போர்ட்'' LF-XI எனப்படும் கையடக்கமான கொண்டுசெல்லக் கூடிய தொலைக்காட்சியே படத்தில் காணப்படுகிறது. இது ஒரு யப்பானிய சோனி நிறுவன தயாரிப்பாகும். இதன் விலை 148ஆயிரம் யென் ஆகும். இது விரைவில் சந்தைப்படுத்தப்படவுள் ளதாகவும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.



# மூளையில் குருதி உறைவதைத் தடுக்க

## இஸ்ரேலிய விஞ்ஞானிகளால் புதிய கருவி கண்டுபிடிப்பு

நவன உலகில் அதிகரித்த மனித நடவடிக்கைகள் காரணமாக அனேகமானோரின் மூளையில் இரத்தம் உறைந்து கட்டிகள் ஏற்படு வது சர்வசாதாரணமாகியுள்ளது. இதனால் மூளைப்பகுதி தாக்கத் துக்குள்ளாகிறது. குறிப்பாக செயலற றுப்போகிறது. இந்த தாக்கத்துக் குள்ளாவோரை பூரணமாக குணப் படுத்துவது இதுவரை முடியாத செயலாக இருக்கின்றது.

எனினும் மூளைக்கு குருதியைக் கொண்டுசெல்லும் நாடி யில் உறைந்துள்ள இரத்தக் கட்டியை அகற்ற புதிதாக கருவி ஒன்றை கண்டுபிடித்து இந்நோயை குணப்படுத்துவது சாத்தியமாகி விட்டது.

இவ்வாறனதொரு கருவி இஸ்ரேல் நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கருவி சத்திரசிகிச்சை மூலம் சம்பந்தப்பட்ட நாடியில் மூளைக்கு இரத்தம் செல்லும் வகையில் பொருத்தப்படும். இக்கருவி கலப்பு உலோகத்தினால் ஆனது. இக் கருவி இரத்தம் உறைவதை தடுத்தலினால் மேற்படி மூளை தாக்க நோயைத் தவிர்க்கலாம்.

இவ்வாறான கருவி ஒன்றை பரீட்சாத்தமாக கடந்த ஒருவருடம் 80 வயது ஜேர்மனிய பெண்ணுக்குப் பொருத்தப்பட்டது. இதன் காரண மாகமேற்படி குருதி உறையும் நோய்க்கு பயன்படுத்தப்படும் மருந்துப் பாவனையை குறைக்க முடியும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனா.

# தண்ணீர்த்தாகம் எவ்வாறு ➡ தோன்றுகின்றது

தண்ணீர்த்தாகம் மனிதன் மட்டுமன்றி அனைத்து விலங்குகளி னதும் அடிப்படை உணர்வு. நீரின்றி உயிர்வாழ்தல் என்பது சாத்தியமற் றதாகி விடுகின்றது. உடலின் நீரின் அளவு குறைகின்றபொழுதே தாக உணர்வு ஏற்படுகின்றது. இதனால் நீரை எப்பாடுபட்டாவது குடிக்க முயற்சிககின்றோம்.

மனிதன்னைப் பொறுத்தவரை தொண்டையும், வாயும் காய்தல் என்பது தாகத்தை வெளிக்காட்டும ஒரு அறிகுறி என உளவியலாளர் கள் கருதுகின்றனர். அதாவது தொண்டையும், வாயும் காய்தல் என்பது தாகத்தை ஏற்படுத்தாது. மாறாக தாகம்தான் இவற்றை ஏற் படுத்தும்.

உடலில் காணப்படும் 'ஹைபோ தலமசு' எனும் அமைப்பின் நரம்பு முடிவிடங்களில் நீரற்றுப் போவதால், அதாவது பிரசாரண வாங்கிகள் நீரின்மையை உணர்வதால் தாக உணர்வு தோன்றுகின்றது. இவ்வுணர்வு மூளையிலுள்ள தாக மையத்தினால் உணரப்படுகின்றது. இவ்வாறு உடமபில நீரற்றுப் போதல் 'கலக் காய்வுத் தாகம்' எனப்படும். மேலும் இரத்தத்தில் நீரின் அளவு குறைவதனாலும் தாகம் ஏற்படும். இந்நிலை 'ஹைபோவொலிமியா' எனபபடும் இம்மாற்றமும் மூளையின் தாக மையத்தினால் உணரப்படும். இவ்வாறு உணரப்பட்டவுடன், தொண்டை, வாய், இரைப்பை என்பன காய்ந்துவிடும். நீர் அருந்த வேண்டிய தேவை ஏற்படும்.நீரை அருந்தும் பொழுது தொண்டை, வாய் நனைந்து விடுகின்றது. குடல், நீரை உறிஞ்சு கின்றது. உடலிலுள்ள வாங்கிகள் இதை உணர்வதால் தாகம் தீர்ந்துவிட்டதாக மூளையும் உணாகின்றது. தாகம் தணிகிறது.



மனிதனின் செவிப்பறை யூடாக ஒலி கடத்தப்படுதலுக்குப் பதிலாக மண்டையோட்டின் மூலமாக ஒலி கடத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள கையடக்கத் தொலைபேசி (Tu ka Cellular TS41)யே படத்தில் காணப்படுகிறது. ''சன்யோ'' நிறுவன தயாரிப்பான இதனைத் தனது நெற்றியில் வைத்து உரையாடுகிறார் நிறுவன ஊழியர் ஒருவர். இதன் பெறுமதி 7,800 ஜென்களாகும்.

அண்மையில் நடைபெற்ற கணினிக் கண்காட்சியொன்றின் போது மௌசாகப் பாவிக் கப்படும் இணைப்பற்ற டிஜிற்றர் பேனை. இப்பேனை வழமை யான பேனைகளைப் போன்று வேறெந்த மேற்பரப பிலும் உபயோகிக்க முடியாது.



## புலிமச்சிநாதகுளம் பகுதியில் சமகால அரசியல் கருத்தரங்கு

மாங்குளம் பிரதேசத்திலுள்ள புலிமச்சிநாதகுளம் பகுதி மக்களுடனான சமகால அரசியல் நிலை தொடர்பான கருத்தரங்கு புலிமச்சிநாதகுளம் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் க.ஜெயதீபன் தலைமையில் கடந்த 15ஆம் திகதி இரவு 7.30 மணிக்கு நடைபெற்றுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் இன்றைய சமகால அரசியல் நிலை தொடர்பான விளக்க உரையினை முல்லை.மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்நிலவு, அம்பகாமம் அ.த.க. பாடசாலை அதிபர் நாகேந்திரராசா, முல்லைத்தீவு மாவட்டத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வேட்பாளர் ச.கனகரத்தினம், சமாதான நீதவான் கி.தியாகராசா ஆகியோர் நிகழ்த்தினர்.

மேற்படி கலந்துரையாடலில் முல்லை.மாவட்ட தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் நாயகன், மாங்குளம் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் ராகுலன், தமிழீழ போக்குவரவுக்கழக ஓட்டுனர் பயிற்சிக்கல்லூரி முகாமையாளர் சி.சந்திரசேகரம், மாங்குளம் பிரதேச மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் சாந்தி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மேற்படி கலந்துரையாடலில் அப் பகுதியைச் சேர்ந்த சுமார் 100க் கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டு கருத்துக்களை கேட்டறிந்தனர். (ஆ)

### -பொழுதுபோக்குக்கழக-

## அங்கத்தவராகப் பதிய விரும்புவோர் விண்ணப்பிக்கக் கோரிக்கை

தமிழீழ விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தால் பொழுது போக்குக்கழக அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நிறுவனத்தின் அங்கத்தவராக பதிவுசெய்ய விரும்புவோர் தமது விண்ணப்பங்களை பின்வரும் ஆவணங்களுடன் நேரடியாக நிறுவனத்தின் பிரதான காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகிறது.

அங்கத்தவராவதற்கான தகமைகள்:-

* ஏதாவது ஒரு விளையாட்டிலாவது பங்குபற்றியிருக்க வேண்டும்.

(இதற்கான அத்தாட்சியாக பாடசாலை அதிபரின் சிபார்சுக் கடிதமோ அன்றி மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தரின் கடிதமோ சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

* 10 வயதிற்கும் 35வயதிற்கும் இடைப்பட்டோராக இருக்கவேண்டும். (அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்)

சமூக சேவைகளில் ஈடுபாடு கொண்டவராக இருக்க வேண்டும்.(கிராம சேவகர் அத் தாட்சி)

## திருமலை தமிழரின் தாயகம் என்பதை ஒன்றுதிரண்டு நிரூபிக்க வேண்டும்

### திருமலையில் மாவை. சேனாதிராஜா கோரிக்கை

(திருகோணமலை)

**திருகோணமலை மாவட்டத் தமிழ் வாக்காளர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஒன்று திரண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து இந்தமண் தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்பதை ஐயத்துக்கிடமின்றி சர்வதேச சமூகத்துக்கு உணர்த்தவேண்டும்-**

இவ்வாறு செவ்வாய்க்கிழமை மாலை திருகோணமலை முத்துக்குமாரசுவாமி கோயிலடி வீதியில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் கூட்டத்தில் பேசிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும், யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளருமான மாவை. சேனாதிராஜா, யாழ். மாவட்ட கூட்டமைப்பு வேட்பாளரான எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் வேண்டுகோள் விடுத்தனர்.

கூட்டத்திற்கு கவிஞர் கோணேஸ்வரன் தலைமை வகித்தார். ஆரம்பத்தில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வேட்பாளர்கள் மற்றும் மாவை. சேனாதிராஜா ஆகியோர் திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்திலிருந்து மங்கள இசையுடன் வித்தியாலயம்வீதி, ராஜவரோதயம் வீதி ஊடாக கூட்டம் நடைபெற்ற இடத்துக்கு அழைத்து வரப்பட்டனர். திருமலை மாவட்டத்தில் போட்டியிடும் கூட்டமைப்பு வேட்பாளர்கள் இரா.சம்பந்தன் (தலைமை வேட்பாளர்) க.துரைரட்ணசிங்கம், எஸ்.கௌரிமுகுந்தன், ஏ.எஸ்சாகுல் ஹமீது, சதா.சண்முக நாதன், வ.விக்கினேஸ்வரன், க.ரகுநாதன் ஆகியோர் கூட்டத்தில் பங்குபற்றினர். யாழ். மாவட்டக்கூட்டமைப்பு வேட்பாளரும், ரெலோ தலைவர்களில் ஒருவருமான முன்னாள் எம்பி.எம்.கே சிவாஜிலிங்கம் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக இரவு 8மணியளவில் திருமலை வந்து சேர்ந்தார். யாழ். மாவட்டத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளரான மாவை சேனாதிராஜா தொடர்ந்து பேசும் போது, மிதவாதத் தமிழ்த் தலைமைகளும், விடுதலைப்புலிகளும் இணைந்து சந்திக்கும் இத்தேர்தலில் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் மிகவும்முக்கியத்துவம் பெறுகின்றது என்று சொன்னார். விடுதலைப்புலிகளின் கரத்தைப் பலப்படுத்துவதாக எதிர்வரும் பொதுத்தேர்தல் முடிவுகள் அமைய வேண்டும் என்றும் சொன்னார்.

யாழ். மாவட்ட கூட்டமைப்பு வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் பேசும்போது, சிங்கள அரசியல் சக்திகளுக்கு இடையே ஏற்பட்ட அதிகாரப்போட்டியின் காரணமாக நாட்டு மக்கள் இத்தேர்தலை சந்திக்கின்றார்கள் என்று சொன்னார். சிங்களஅரசுகள் விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பை ஏற்று நிரந்தரத் தீர்வொன்றுகாண முன்வராத பட்சத்தில், கிழக்கு தீமோர் நாட்டில் ஏற்பட்டது போன்ற நிலவரம் இங்கும் உருவாகலாம் என்று சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், திருமலை மாவட்ட கூட்டமைப்பு வேட்பாளர்களில் ஒருவருமான க.துரைரட்ணசிங்கம் பேசுகையில், எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபை ஒன்றை வடக்கு கிழக்கில் ஏற்படுத்த வேண்டியநிலை உருவாகியுள்ளது. விடுதலைப்புலிகளின் கரங்களைப் பலப்படுத்துவதன் மூலமே இது சாத்தியமாகும். தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டுக்கு உரமூட்டவே தேர்தலில் போட்டியிடுகின்றது. கூட்டமைப்பின் ஏனைய வேட்பாளர்களும் பேசினார்கள். (25)

## எமது பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு எமக்குண்டு

### தமிழகத்தில் ஏமாற்றப்பட்ட ஈழத்தமிழ் பெண்கள் குறித்து வவு.அரசியல்துறை

(வவுனியா)

எமது பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது. எமது பண்பாட்டு கலாச்சாரத்திற்கு ஊறு விளைவிக்கும் நடவடிக்கைகள் ஏற்பட்டால் அதற்கெதிராக நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டியேற்படுமென தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி தமிழ் நாட்டிலுள்ள அகதி முகாம்களிலிருந்து அழைத்து வரப்பட்டு கொழும்பில் தடுத்துவைக்கப்பட்ட 50இற்கும் மேற்பட்ட பெண்கள் வவுனியா அரசியல்துறையினரிடம் தஞ்சம்கோரியமை தொடர்பாக ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் இந்தக் கருத்தினைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் உண்மையில் இது துரதிஸ்டவசமான நிகழ்வு. எமது பெண்கள் மிகப் பாதிக்கப்பட்ட நிலைமை ஒன்று ஏற்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் இந்தியாவில் உள்ள நலன்புரி நிலையங்களில் வாழ்ந்தவர்கள் பல வழிகளிலும் ஏமாற்றப்பட்டுத் தான் இங்கு அழைத்து வரப்பட்டுள்ளார்கள். பல கொடுமைகளைச் சந்தித்துள்ளார்கள்.

எமக்கு ஒரு விடயம் புதிராக உள்ளது. இவர்களை ஒருமுறை கைதுசெய்து பொலிசார் விசாரித்தபோது, 18 வயதுக்குட்பட்ட சிறுமியர்கள் தாம் பணிப்பெண்களாக மத்திய கிழக்கிற்கு அனுப்பி வைக்கப்படுவதற்காக அழைத்து வரப்பட்டவர்கள் என்று கூறிய போதும், பொலிசார் அவர்களை அந்த முகவர்களிடமே கையளித்துள்ளனர். இந்த விடயம் தொடர்பாக யார் யார் சம்பந்தப்பட்டுள்ளனர் என்பது தொடர்பாக நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

இனிவரும் காலங்களில் இத்தகைய சம்பவங்கள் தொடரக் கூடாது என்பதே எமது விருப்பம். இதனூடாக இந்தியாவிலுள்ள நமது பெண்களுக்கு நாம் கூற விரும்புவது யாதெனில், இயன்றளவு ஆராய்ந்து இத்தகைய துர்ப்பாக்கிய நிலைகளில் இருந்து தப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை ஏமாற்றப்பட்ட இப்பெண்கள் குறித்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவிக்கையில்,

தென் இந்தியாவின் அகதி முகாம்களில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரும் மிகவும் கவனமாக இருக்குமாறு வவுனியா தமிழர் புனர்வாழ்வு கேட்டுள்ளது. வெளிநாட்டில் வேலைபெற்றுத் தருவதாகக் கூறி தமிழ் பெண்களினை சில நபர்கள் அழைத்து வந்து சதிசெய்வதாகவும் இதனால் தமிழ்ப் பெண்கள் மிகவும் பாதிப்புற்று வவுனியா விடுதலைப் புலிகளின் காரியாலயத்திற்கு வந்துள்ளனர். இவர்களுக்கான தேவைகளினை விடுதலைப் புலிகளுடன் இணைந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பூர்த்தி செய்து கொடுத்துள்ளது. அத்துடன் அந்த பெண்களின் விருப்பத்தின்படி அவர்களின் உறவினர்களுடன் இணைக்கப்பட்டு வருகின்றனர். ஆசை வார்த்தைகளினைக் காட்டி எந்தவிதமான ஆவணங்களும் இன்றி அந்தபெண்கள் அழைத்துவரப்பட்டுள்ளதால் அப் பெண்கள் பெரும் சிரமங்களினை எதிர்நோக்கி வருவதாகவும் இதன் காரணமாக தென்இந்திய அகதிமுகாம்களில் வாழ்ந்து வரும் தமிழ் அகதிகள் மிகவும் அவதானமாக இருக்குமாறும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கேட்டுள்ளது. (21)

## முள்ளிப்பள்ளம் பகுதியில் படையினர் புதியகாவலரண்கள்

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்குச் செல்லும் முள்ளிப்பள்ளம் என்னும் இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் புதிதாக பல காவலரண்களை அமைத்து வருகின்றனர்.படையினரின் இத்தகைய நடவடிக்கையினால் மக்கள் பெரும் விசனமடைந்துள்ளனர். (மி)

## மட்டு. இயல்பு நிலைதிரும்பும்வரை பரீட்சையை ஒத்திப்போடுக

### திருமலை மாவட்ட பல்கலை மாணவர் ஒன்றியம் கடிதம்

(திருகோணமலை)

இயல்பு நிலை திரும்பும் வரை ஒத்திவைக்கப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பரீட்சைகளை நடத்த வேண்டாம் என்று திருகோணமலை மாவட்டப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக கிழக்குப் பல்கலைக்கழக பதிவாளருக்கு ஒன்றியத்தின் செயலாளர்கடிதம் அனுப்பியுள்ளார். கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; மாணவர்களை விடுதிக்குத் திரும்பும் படியும், பரீட்சைகளை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழக மூதவை அறிவித்திருப்பதாக ஊடகங்கள் மூலமாக அறிகின்றோம்.

மட்டக்களப்பில் உள்ள பதற்ற நிலவரம் காரணமாக எம்மை அங்கு அனுப்புவதற்கு பெற்றோர் தயங்குகின்றனர். தற்போதைய சூழ்நிலை அங்கு நாம் திரும்புவதற்கு உகந்தது அல்ல என்று கருதுகின்றோம்.

ஆகவே தற்போதைய விடுமுறைக்காலத்தை நீடிக்கும் படியும், பரீட்சைகளை இயல்பு நிலை திரும்பியபின் நடத்தும்படியும் கோருகின்றோம். இவ்வாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## வரட்சியால் 8000 ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு

மன்னார் கட்டுக்கரை குளத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட காலபோக நெற்செய்கையில் 50 வீதத்திற்கும் அதிகமானவை வரட்சியால் அழிவடைந்துள்ளன.

இக்குளத்தின் கீழ் 14,000 ஏக்கர் நெற்செய்கை கடந்த கால போகத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் வரட்சியால் 8000 ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளது.

மேலும், எதிர்வரும் சிறுபோக நெற்செய்கையும் வரட்சி தொடருமாயின் கைவிடப்பட வேண்டிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு நீரற்காக கால் நடைகள் பெரும் அவலப்படுத்திவதையும் அவதானிக்க முடிகின்றது.(மி)

## சட்டவிரோத குடியேற்றத்தைக் கட்டுப்படுத்த புதிய நடைமுறைகள் 'மே' முதல் பிரி.இல் அமுல்

### -உள்துறை அமைச்சர் டேவிட்பிளங்கெட் அறிவிப்பு

(லண்டன்)

சட்டவிரோதக் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் புதிய நடைமுறைகளை பிரிட்டன் வெளியிட்டுள்ளது. எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் இது நடைமுறைக்கு வருகின்றது.

இதனை பிரிட்டன் உள்துறை செயலர் டேவிட் பிளங்கெட் செவ்வாய்க்கிழமை கூறியுள்ளார்.

எல்லைக்கட்டுப்பாட்டை வலுப்படுத்தலும், சட்டவிரோதமாக (வேலை செய்வதைத் தடுப்பதற்கான நடைமுறைகளை அதிகரித்தல், இவ்வாறான வேலையாட்களை நாட்டிற்குக் கொண்டுவரும் குற்றக் கும்பல்களின் வலையமைப்பைத் தவிர்த்தல் என்பன இந்நடவடிக்கைகளில் உள்ளடங்குகின்றன.

அத்துடன் குடிவரவு சேவையின் நடவடிக்கைகளை பிரிட்டிஷ் மீளாய்வு செய்து வருகின்றது. சட்டவிரோத வேலையானது ஒரு கடுமையான குற்றச்செயலாகும். சட்டவிதிகளை மீறுபவர்களுக்கு விதிக்கப்படும் தண்டப்பணத் தொகையும் அதிகரிக்கப்படவுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

## வீதிபுனரமைப்பு

(மல்லாவி)

மாங்குளம்-வெள்ளாங்குளம் வீதியின் புனரமைப்பு வேலைகள் நடை பெற்றுவருகிறது.இவ்வீதிக் குறூர் ஊற்றுப்பட்டு செப்பனிடப்படுகிறது (24)

## 5000 அரச ஊழியர் மன்னாரில் தபால் மூலம் வாக்களிப்பர்

(மன்னார்)

மன்னாரில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் சுமார் 5,000 அரச ஊழியர்கள் தபால் மூலம் வாக்களிக்கவுள்ளார்கள். எதிர்வரும் 24,25 ஆம் திகதிகளில் தபால் மூலம் வாக்களிப்பு அந்தந்த திணைக்கள தலைமை அலுவலகங்களில் நடைபெறும். (ரி)

# பௌத்தர்களின் உரிமைபற்றி பேச பிக்குகள் நாடாளுமன்றில் இருக்கவேண்டும்

**ஜாதிகஹெல உறுமயவின் அமைப்பாளர் சிறிசுமங்களதேரர்**

(கொழும்பு)

**பௌத்தர்களின் உரிமைகள் மற்றும் அவர்களது பஞ்ச சீல கொள்கைகள் தொடர்பாக பேசுவதற்கு பௌத்த பிக்குகள் கண்டிப்பாக நாடாளுமன்றில் இருக்க வேண்டுமென்று ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் வண. கொலன்னாவ சிறி சுமங்களதேரர் கூறியுள்ளார்.**

ஜாதிக ஹெல உறுமயவில் உள்ள பௌத்த பிக்குகளின் கூட்டம்குருநாகலில் நடந்தபோதே, கொலன்னாவ சிறிசுமங்களதேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பௌத்த ராஜ்யம் ஒன்றை அமைக்கும் நோக்கிலேயே பிக்குகள் நாடாளுமன்றம் செல்வதற்குத் தீர்மானித்துள்ளார்கள்.அத்துடன் எமது ராஜ்யத்தில் முன்னைய அரசர்களால் சுமார் 34 ஆயிரம் குளங்கள் கட்டப்பட்டிருந்தன.

ஆனால் அவையெல்லாம் தற்போது சீரழிக்கப்பட்டுவிட்டன இந்த நாட்டில் இளைஞர்கள் வேலைவாய்ப்பில்லாமல் உள்ளனர்.

ஆட்சியாளர்கள் வழங்கிய உறுதிமொழிகள் எல்லாம் அவர்களாலேயே முறியடிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை இந்தநாடு இரண்டாகப் பிளவுபடுவதையும் அனுமதிக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

# -ஆய்வு கூடவசதியற்ற வைத்தியசாலைகளுக்கு- மலேரியா பரிசோதனைக்கு புதிய கருவி வழங்கல்

(அலுவலகசெய்தியாளர்)

கிளி/முல்லை பிரதேச மக்கள் நலன்கருதி ஆய்வு கூடவசதி அற்ற வைத்திய சாலைகளுக்கு இரத்தப் பரிசோதனை '(OPTIMALIT)' எனும் மருத்துவ உபகரணம் வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மலேரியா தடைப் பகுதியினரால் கிளி/முல்லை மாவட்டத்தில் உள்ள ஆய்வு கூட வசதியில்லாத அல்லது பகுதி நேர ஆய்வு கூட வசதியுள்ள வைத்தியசாலைகளுக்கு (நுண்கருவியாளரினால் இரத்தக் கறைப் பரிசோதனை மேற்கொள் ளும்) வைத்தியசாலைகள் உடனடியாக மலேரியா இரத்தப் பரிசோதனை செய்வதற்கு மேற்படி மருத்துவ உபகரணம் வழங்கப்பட்டுள்ளதுடன் பயிற்சியும் வழங் கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மலேரியா தாக்கத்தினை இலகுவாக இனங் காணமுடிவதுடன் விரைவாக சிகிச்சையினை மேற்கொள்ள முடியுமென கிளி/முல்லை மலேரியா தடைப்பகுதியினர் தெரிவித்துள்ளனர். (சோ)

# பொலிஸ் அதிகாரிகள் குறித்து தனது பணிப்புரை கவனத்தில் கொள்ளப்படாதது குறித்து சனாதிபதி அதிருப்தி

(கொழும்பு)

பாரபட்சமான முறையில் செயற்படும் பொலிஸ் அதிகாரிகள் தொடர்பில் தாம்விடுத்திருந்த பணிப்புரைகளை கவனத்தில் கொள்ளாமை குறித்து சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடும் அதிருப்திகொண்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ்மா அதிபர் இந்திராடி சில்வாவுடன் இவ்வாரமுற்பகுதியில் சனாதிபதி மாளிகையில் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கும் சனாதிபதி இந்த விவகாரம் தொடர்பில் பொலிஸ்மா அதிபர் அதிக கவனம் செலுத்த வேண்டும்என்றும் வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக பெலியத்தை, மாவத்தகம பகுதிகளிலுள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் பாரபட்சமாக சேவையாற்றுவதாகவும் இவர்கள் இடம் மாற்றப்பட்டு உகந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் சனாதிபதி பொலிஸ் ஆணைக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேநேரம் அரசியல் யாப்பின் 17ஆவது திருத்தத்திற்கமைய பொலிஸ் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் சனாதிபதி தலையிட முடியாதென்றும் ஆனால் பொலிஸ் அதிகாரிகள் நேர்மையாக செயற்படவைப்பதற்குப் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில்சனாதிபதி பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தல்களை வழங்க முடியும் என்று சனாதிபதியின் பேச்சாளர் ஹரிம்பிரிஸ் கூறியுள்ளார்.

# "லீஸ்மானியாசிஸ்" நோய் குறித்து நெடுந்தீவு மக்கள் அச்சம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதிகளில் "லீஸ்மானியாசிஸ்" எனப்படும் ஆபத்துக்குரிய நோயினைப் பரப்பும் இலையான் வகையால், நெடுந்தீவுமக்கள் அச்சமடைந்துள்ளனர். யாழ். சுகாதார சேவைகள் பணிமனையின் பூச்சியியல் ஆய்வாளர் சிவமோகன் இது குறித்து தெரிவிக்கையில்,

"லீஸ்மானியாசிஸ்" நோய்க்குரிய கிருமிகள் தற்போது நெடுந்தீவில் இல்லையாயினும் ,இந்தியாவில் இருந்து வரும் அகதிகள், மீனவர்கள் மூலம் காவப்பட்டுவருவதாகவும் இலையான்கள் மூலம் மிக வேகமாக இந்நோய் பரவும் ஆபத்து உள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# வேட்பாளருக்கு வழங்க கொண்டுவந்த ஆயுதங்களுடன் சிப்பாய் கைது

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பி ஓடியஇராணுவச் சிப்பாயிடமிருந்து மூன்று கைக்குண்டுகள், மற்றும் வெடிப்பொருட்கள், ஆயுதங் களுடன் பத்தரமுல்ல பொலிசார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சிப்பாய் தெரிவிக்கையில், பொரெல்ல வேட்பாளர் ஒருவருக்கு இவைகளை விற்பதற்காக தாம் திருடியதாக கூறியுள்ளார். தேர்தல் காலங்களில் வன்செயல்களை தூண்டி விடு வதற்கே இந்த வெடிப்பொருட்களை பணம் கொடுத்து வேண்டுவதாக அந்த வேட்பாளர் கூறியபடியால் இவைகளை தாம் கொண்டு வந்துள்ளதாக கூறியுள்ளார்.

# இல்ல விளையாட்டுப் போட்டி

(அலுவல செய்தியாளர்)

கிளி/கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நேற்று வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.வித்தியாலய முதல்வர் ம.உமாசங்கர் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மங்கல விளக்கினை கிளி/வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் க.சிவசாமி,கிளி/மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழதேசியக் கொடியினை மாணவர் படைமுதல் மாவீரனின் தந்தை ஆ.நடராசன் ஏற்றி வைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து வித்தியாலயக் கொடியினை வித்தியாலய முதல்வர் ஏற்றிவைத்தார்.ஆசியுரையினைத் தொடர்ந்து இல்ல விளையாட்டுக்கள் இடம்பெற்றது. 324 1/2 புள்ளிகளைப் பெற்று பிரம்மா இல்லம் முதலிடத்தினையும், 282 1/2 புள்ளிகளைப் பெற்று உருத்திரன் இல்லம் இரண்டாம் இடத்தினையும், 277 புள்ளிகளைப் பெற்று விஸ்ணு இல்லம் மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டது.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கு கிளி/மாவட்ட வி.மா.சு.சே. பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி கிளி/வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் ஆகியோர் பரிசில்களையும், சான்றிதழ் களையும் வழங்கி கௌரவித்தனர்பொதுமக்கள், நலன் விரும்பிகள், பெருமளவில் கலந்து சிறுவர்களின் விளையாட்டுக்களைக் கண்டுகளித்தமை குறிப்பிடத் தக்கது. (சோ)

# விளையாட்டு விழா

(பூநகரி)

பூநகரிப்பிரதேச செயலர் பிரிவு கழகங்களுக்கிடையேயான விளையாட்டு விழா இன்றும், நாளையும் நல்லூர் எவரெடி விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதிநாள் நிகழ்வில் அரச அதிபர் முதன்மை விருந்தினராக கலந்து கொள்ளவார் என பிதேச செயலர் அறியத்தருகின்றார்.

# யாழ்.இல் இரு திருடர்களிடமிருந்து பல இலட்சம்ரூபா பொருட்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இரண்டு திருட்டு சந்தேக நபர்களிடம் 7 புதிய துவிச்சக்கர வண்டிகள்,பலலட்சம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகள், புகைப்படக் கருவிகள், கைக்கடிகாரங்கள், மருத்துவப் பரிசோதனைக் கருவிகள் உட்பட மின் இலத்திரனியல், பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் பல லட்சரூபா பெறுமதியான 100 பவுணுக்கு மேற்பட்ட தங்க நகைகளும், 10 தொலைக்காட்சிப் பெட்டிக்குள் மறைத்து வைத்திருந்த போது கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் பல்வேறு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டே இவர்கள் இவ்வளவு நகை, பொருட்களை களவாடியுள்ளார்கள்.

அதுமட்டுமன்றி பல லட்சரூபா பணமும் இவர்களிடம் இருப்பதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

கோண்டாவில், நாவாந்துறையைச் சேர்ந்த இந்த இளைஞர்கள் இருவரிடமும் பொலிசார் விசாரணையைத் தொடர்கின்றார்கள்.

# அலங்காரத் திருவிழா

வட்டக்கச்சி மாயவனூர் அருள் மிகு சிவன் ஆலய வருடாந்த மகோற்சவ பெருவிழா எதிர் வரும் 26.03.2004 வெள்ளிக் கிழமை காலை.9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

25.03.2004 அன்று விநாயக வழிபாடு நடைபெறும். 12 நாட்களின் பின்னர் 09ம் திருவிழா தேர்த்திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறும். (12)

# நுளம்புவலை விநியோகம்

மலேரியா நோயிலிருந்து மக்களை விடுவிக்கும் நோக்கத்துடன் நேற்று முன்தினம் கோவில் வயல் சங்கத்தார் வயல் பணிக்கையடி வை.எம்.சி.ஏ. திட்டப்பகுதி, இயக்கச்சி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 285 குடும்பங்களிற்கு நுளம்புவலை விநியோகம் செய்யப்பட்டது.

சர்வோதயம் நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், மாவட்ட சுகாதார வைத்திய பணிமனையினதும் அனுசரனையுடன் பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகம் இணைந்த வகையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் கிராம அலுவலர்களும், சமூக பொருளாதார அபிவிருத்திக்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (சோ)


# நீங்காத நினைவலைகள்



மலர்வு 17 08 1930

உதிர்வு 12 02 2004

நாட்டுப்பற்றாளர்

**காசிப்பிள்ளை - கார்த்திகேயன்**

**(இரகண்ணை)**

திதிவெண்பா

*தொண்டர் திலகம் சுடர் கார்த்தி கேயனார்*
*அண்டர் கோன் பாதம் அடைந்ததீதி-விண்டுரைப்பன்*
*ஆண்டு சுபானுதை யாம் அபர பக்கத்தே*
*ஈண்டு சப்த மித்திதியென்றேல்.*

**நாட்டுப்பற்றாளர் இரகண்ணையின் நினைவு நிகழ்வு நாளை (21.03.2004) ஞாயிறு தொட்டியடியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நிகழவுள்ளது. இந்நிகழ்விலும், பகலுணவிலும் பங்குபற்றுமாறு போராளிகள், பொருண்மிய நிறுவனத்தினர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

தொட்டியடி,
விசுவமடு.

(சி.9425)

**குடும்பத்தினர்.**



மூன்றாம் ஆண்டின் நீங்காத நினைவில்



மண்ணில் 15 09 1988

விண்ணில் 20 08 2001

**ஷெலப்.டெனி**

(ஓயாத அலை-03 நடவடிக்கை)

மேரி ஜோசப் தங்கதாஸ்
இல.330,ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

*பசுமையாக எம் நெஞ்சங்களில் கலந்த*
*அன்புத் தெய்வமே டெனி-புயல்வீசி சாய்ந்த*
*ஆலமரம் போல் சடுதியில் மறைந்தீரே*
*கூடிவாழ்ந்த பறவைகள் நாம் தவிக்கின்றோம்*
*ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும்— எம்*
*மனங்களை விட்டு உம் அன்புமுகம்மறக்குமா..*

உன்பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

(4353)



**சிந்தனைக்கு**

மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 20 -03-2004


## பொருத்தமான எடுத்துக்காட்டு!

கருணா செய்த துரோகம், ஏற்படுத்திய குழப்பம் என்பதற்குப் பின்னர் முதல்முதலில் இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் காலத்திற்குப் பொருத்தமானதும், தமிழீழத் தேசியத் தலைவர் குறித்து மக்கள் விளங்கிக் கொள்ளக்கூடியதுமானதொரு எடுத்துக்காட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் முன்னாள் சிறிலங்கா சனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கும் இடையிலான பேச்சுவார்த்தை நடைபெற்ற காலத்தில், ஒரு சந்தர்ப்பத்தில் சனாதிபதி பிரேமதாசா அவர்கள் 'வடக்கு மாகாணத்தை தமிழரின் தாயகமாக நிர்வகிப்பதற்கான பூரண அரசியல் அதிகாரமுள்ள பிரதேசமாக அங்கீகரிப்பதற்கு தான் தயாராக இருப்பதாக'க் கூறினார். இதனைத் தலைவர் பிரபாகரனுக்குக் கூறுமாறும் கேட்டுக்கொண்டார்.

ஆனால், தலைவர் பிரபாகரன் எந்தவொரு கட்டத்திலும் கிழக்கு மாகாணத்தையோ கிழக்கு மாகாண மக்களையோ தாம் கைவிடப்போவதில்லை என உறுதிபடத் தெரிவித்துவிட்டார். அதாவது தலைவர் பிரபாகரன் எவ்வேளையிலும் வடக்கு–கிழக்கு என்ற ரீதியில் எதனையுமே பிரித்துப் பார்ப்பது கிடையாது. தலைவர் பிரபாகரனைப் பொறுத்து வடக்கு–கிழக்கு என்பது அர்த்தமற்ற பேச்சு. தமிழர் தாயகம் என்பதே அவரது குறிக்கோள். விடுதலைப்புலிகளின் இயக்கமும் அதுவே. அதாவது "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம" என்பது.

தலைவர் பிரபாகரன் கிழக்கு மாகாணத்தின் மீது அக்கறை கொண்டிருந்தார் என்பதற்குக் கருணாவின் மீது நம்பிக்கை வைத்து அனைத்துப்பொறுப்புக்களையும் கருணாவிடம் விட்டிருந்தமையே எடுத்துக்காட்டாகக் கொள்ளத்தக்கதாகும். அதாவது மட்டு.அம்பாறை மாவட்டங்களில் அரசியல்–இராணுவ மற்றும் நிதிவளங்கள் உட்பட அனைத்திற்குமே பொறுப்பாக இருந்துள்ளமையே இதனை வெளிப்படுத்தப் போதுமானதாகும்.

இதேவேளை தலைவர் பிரபாகரன் அவர்கள் பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவர் என்பது மட்டுமல்ல தமிழ் மக்கள் மத்தியில் புரையோடிப் போயுள்ள வேறுபாடுகள், முரண்பாடுகள் அதாவது சாதி,சமய வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்டவராகவே இருந்து வந்துள்ளார். தமிழ் மக்கள் மத்தியில் புரையோடிப்போயிருந்த இவ்வேறுபாடுகள் விடுதலைப் புலிகளின் தீர்க்கமான நடவடிக்கை காரணமாகவே முனை மழுங்கிப்போனவையாக மாறின. அதாவது தலைவர் பிரபாகரனின் உறுதியான வழிநடத்துதல், செயற்பாடுகள் என்பனவற்றால் இத்தகைய நிலை ஏற்பட்டது எனின் அது மிகையாகாது.

அதாவது தலைவர் பிரபாகரன் அவர்கள் ஒருபுறத்தில் பிரதேசவாதத்திற்கும் தமிழ் மக்கள் மத்தியில் காணப்பட்ட முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்டவராகவும், தமிழ் மக்கள்மத்தியில் ஒருமைப்பாட்டிற்கும் இக்கியத்திற்குமாக உறுதிப்பாட்டுடனும் செயற்பட்டவராக இருந்தார்.

தலைவர் பிரபாகரன் அவர்களின் மூன்று தசாப்த காலத்திற்கும் மேற்பட்ட அரசியல் வாழ்க்கையில் அவர் பிரதேசவாதத்திற்கு உட்பட்டிருந்தார் என்பதோ, அன்றி தமிழ் மக்களிடையில் புரையோடிப்போயுள்ள சாதி வேறுபாடுகளுக்கோ இடமளித்ததாகக் குற்றச்சாட்டுக்கள் இருந்ததில்லை. அவ்வாறு இருந்திருக்குமேயானால் தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழ் மக்களின் தேசியத் தலைவராக வளர்ச்சி கண்டிருக்கமாட்டார். விடுதலைப்புலிகள் இயக்கம் விடுதலைக்கான தேசிய இயக்கமாக வளர்ச்சி கண்டிருக்கவும் முடியாது.

அத்தோடு, தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழர் தேசியத்தையும், ஒருமைப்பாட்டையும் பேணுவதற்காக விட்டுக்கொடுப்புக்களையும் சகிப்புத்தன்மையையும் கைக்கொள்ளாமலும் இல்லை. இதற்கு கடந்தகால நிகழ்வுகள் பலவற்றை உதாரணமாகவும் கொள்ளலாம். அதிலும் குறிப்பாக கருணாவின் நடவடிக்கைகள் பல தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குப் பாதகமாக இருந்த வேளையிலும் தலைவர் பிரபாகரன் அவர்கள் அவற்றைச் சகித்துக்கொண்டார்.

இதன்விளைவானது கருணாவின் தவறுகளுக்கான பொறுப்புக்களையும், தலைவர் பிரபாகரன் அவர்களும், விடுதலைப்புலிகள் அமைப்பும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாகவே இருந்தது. இவை தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஏற்படுத்திய பாதிப்புக்கள் மிகவும் காத்திரமானவையாகும். ஏன் பின்னடைவுகளைக் கூட ஏற்படுத்தியது என்றே கூறலாம்.

இந்தவகையில், தேசியத் தலைவரின் நடவடிக்கையானது தமிழ் மக்களின் ஐக்கியம் ஒருமைப்பாடு என்பனவற்றிற்கானதாக இருக்கையில் தற்பொழுது கருணாவினால் கிளப்பப்படும் பிரதேசவாதமானது அர்த்தமற்றது என்பது மட்டுமல்ல, தமிழர் தேசியத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இழைத்த பச்சைத்துரோகமுமாகும். கருணாவின் இச்செயலானது உண்மைக்கு மாறானதும் மக்கள் விரோதச்செயலும். ஆகையினால் தமிழீழத் தேசியத் தலைமைக்கோ, தமிழ் தேசியத்திற்கோ ஊறுவிளைவிக்காது போயினும் தமிழ் மக்கள் மனங்களில் துயரத்தையும், கவலையையும் ஏற்படுத்தியது என்பது மறுக்கவோ, மறைக்கவோ முடியாத ஒன்றே.

# பக்கச்சார்பான செயற்பாட்டைக் கட்டுப்படுத்த அரச ஊடகங்களுக்கு தகுதியான அதிகாரியை நியமிக்குக!

### -தேர்தல் ஆணையாளரிடம் ஐ.தே.மு. அரசு கோரிக்கை

(கொழும்பு)

அரச ஊடகங்கள் பக்க சார்பாக நடந்து கொள்வதைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை உடனடியாக நியமிக்குமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கவிடம் அரசாங்கம் கேட்டுள்ளது.

அரச ஊடகங்கள் கடந்த சில தினங்களாக மிக மோசமான முறையில் நடந்து கொள்வதாகவும், பொய்யான தகவல்களை தெரிவிப்பதுடன் அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டாலும் அது குறித்து செய்திகளை வெளியிடுவதில்லை எனவும் தேர்தல் ஆணையாளரிடம் சுட்டிக காட்டப்பட்டுள்ளது.

இச்செயல் மேலும் தொடராமல் தடுக்கும் பொருட்டு ஒரு தகுதி வாய்ந்த அதிகாரியை நியமிக்க வேண்டும் எனக் கேட்டகப்பட்டிருககின்றது என்று அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று முன்தினம் கொழும்பில் செய்தியாளர்களிடம் மாநாட்டில் கூறியுள்ளார்.

# பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளதால் சு.சேவையினரின் சம்பளத்தை அதிகரிக்க முடியாது

### மீளாய்வு செய்ய குழு அமைக்கப்படுமென்கிறார் சொக்ஸி

(கொழும்பு)

பாராளுமன்றம் தற்பொழுது கலைக்கப்பட்டிருக்கின்றபடியால் சுகாதார சேவை ஊழியர்களின் சம்பள உயர்வுகளை அதிகரிக்க முடியாதென நிதி அமைச்சர் சொக்ஸி வைத்தியர் தொழிற் சங்க அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளார்.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் சகல அரச ஊழியர்களுக்கும சம்பள உயர்வுகள் வழங்கப்பட்டிருக்கின்றபடியால் இந்தக் கோரிக்கைகளை தற்பொழுது ஏற்றுக் கொள்ள முடியாதெனவும் புதிய அரசு பதவி ஏற்றால் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு எடுக்கப்படும் எனவும் இதனால் பொதுமக்கள் பெரும் கஷ்டங்களுக்கு முகம கொடுத்துள்ளனர் என்று நீதி அமைச்சர் அறிவித்துள்ளார்.

அரச துறை ஊழியர்களின் சம்பளத்தை மீள்பரிசீலனை செய்வதற் காக குழுவொன்றை அமைக்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

2003 ஆம்ஆண்டு நவம்பர் மாதம சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் அரசதுறை ஊழியர் களுக்கென அறிவிக்கப்பட்ட சம்பளத்திட்டங்களை இக்குழு மீள்பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்.

இக்குழு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இது அரச துறை ஊழியர்களது சம்பள நிர்ணயங்கள்,குளறுபடிகள் ஆகியனவற்றை மீள் பரிசீலனை செய்யும்.

இவ்மீள்பரிசீலனைக் குழுவுக்கு நிதியமைச்சர் ஐந்து பேரை நியமித்துள்ளார்.

புதன்கிழமை அரச ஊழியர்களின் சம்பளத்தை மீள்பரிசீனை செய்வதற்கான குழு நிர்ணயிப் பது என்று முடிவு செய்யப்பட்டுள் ளது என்றும் சொக்ஸி தெரிவித்துள்ளார்.

# எனது பிரச்சாரத்தைத் தடுப்பதற்கான சதியே அக்கரைப்பற்று ஹர்த்தால்

### ரவூப்ஹக்கீம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அக்கரைப்பற்றில் கடந்த புதன் கிழமை மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால் எனது கட்சியின் தேர்தல் பிரச்சாரத்தை தடை செய்வதற்கான சதி முயற்சியென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இக் ஹர்த்தால் எனது கட்சி மேற்கொள்ளவிருந்த பிரச்சார ஊர்வலத்தை தடைசெய்வதற்காகவே திட்டமிடப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதனால அன்றையதினம் இரவு வரை எமது பிரச்சார ஊர்வலம் எதனையும் மேற்கொள்ள முடியவில்லையெனவும் தெரிவிதுள்ளார்.

# தேர்தல் வன்செயல்கள் அதிகரிக்கலாம் எச்சரிக்கையுடன் இருக்க பொலிசாருக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தல் நெருங்க வன்செயல்களையும், கொலைகளையும் புரிந்த கும்பல் ஒன்றின நடமாட்டங்கள் அதிகரிக்கும் அறிகுறிகள் தென்படுகின்ற படியால் இவைகளை கட்டுப்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கும் படி சகல பொலிஸ்நிலைய பொறுபபதிகாரிகளுக்கும் பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா அறிவித்துள்ளார்.

இவர்கள் சம்பந்தமாக சகல விபரங்களையும் சேகரிக்குமாறும், இந்தச்சம்பவங்களில் இராணுவத்திலிருந்து தப்பியோடிய வீரர்களும் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

# கண்காணிப்புக்குழுவை ஜப்பானும் அனுப்பும்

(டோக்கியோ)

பாராளுமன்றத் தேர்தலைக் கண்காணிப்பதற்கென்று ஜப்பானிய அரச கண்காணிப்புக் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பவுள்ளது.

கண்காணிப்புப் பணிகளுக்காக ஜப்பானிய அரசு 30 ஆயிரம் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளதாகவும் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கூறியுள்ளார்.

வெளிநாட்டமைச்சின் அதிகாரிகள மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கொண்ட குழுவே இம்மாத இறுதியில் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும கூறியுள்ளார்.

அத்துடன் தேர்தலை கண்காணிக்க பிரதிநிதிகளை அனுப்புமாறு தேர்தல் ஆணையம் கோரிக்கை விடுத்ததையடுத்தே அனுப்பவுள் ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## விலை அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு-புறக்கோட்டைச் சந்தையில் அத்தியாவசிய உப உணவுப் பொருட்களின் விலை திடீரென கடந்த வாரம் முதல் படிப படியாக அதிகரித்து வருகின்றது.

அந்தவகையில், நேற்று முன் தினம் சீனியின் விலை 32ரூபாவில் இருந்து 40ரூபாவாகவும், ஒருலீற்றர் தேங்காய் எண்ணெயின் விலை 65ரூபாவிலிருந்து 95ரூபாவுக்கும்,48 பேணிகள் கொண்ட டின்மீன் பொதியின் மொத்த விலை 2500 ரூபாவில் இருந்து 2900 ரூபாவாகவும், மைசூர் பருப்பு ஒரு கிலோ 55 ரூபாவிலிருந்து 63 ரூபாவாகவும் அதிகரித்துள் ளன.

இவ்விலை அதிகரிப்பிற்கு உடனடிக் காரணம் எதுவும் கண்டறியப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் கண்காணிப்புக்கென நெதர்லாந்து உதவி

நெதர்லாந்து அரசாங்கம் எதிர்வரும் பொதுத் தேர்தல் கண்காணிப்புக்களுக்காக தேர்தல் வன்முறைகளுக்கு எதிரான அமைப்பிற்கு 60 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

இதேவேளை நெதர்லாந்தின் சிறிலங்காவிற்கான தூதுவர் சூசின் பினாங்கன் கடந்த 15ஆம் திகதிமுதல் 17ஆம் திகதி வரை தென்னிலங்கையின் பல மாவட்டங்களுக்கும் விஜயம் மேற்கொண்டார். இவர் இந்த விஜயத்தின் போது சிறிலங்காவின் காவலதுறை அதிகாரிகளையும தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளவர்களையும் சந்தித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தல் வன்முறைகளற்ற விதத்தில் இடம் பெற வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நெதர்லாந்து தான் வழங்கிய நிதியுதவியின் மூலம் தேர்தலை வன்முறைகளின்றி நடத்தி சனநாயக உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே தனது விருப்பம் எனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை தேர்தல்களில் வன்முறைகள் இடம்பெறுவதைத் தடுக்கும் வகையில் ஐரோப்பிய ஒன்றியம் தற்சமயம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நெதர்லாந்தின் தூதுவர் தனது இந்த விஜயத்தின்போது ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்களையும் சந்தித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## உதைபந்தாட்டம்

கரைதுறைப்பற்று கோட்ட பாடசாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டிகளில் 17வயது பிரிவில் முதலாம் இடத்தை முல்லைத்தீவு மகாவித்தியாலயமும் இரண்டாம் இடத்தை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

19வயதுப் பிரிவில் 1ம் இடத்தை மு/வித்தியானந்தாக் கல்லூரியும், 2ம் இடத்தை முல்லைத்தீவு ம.வி.யும் பெற்றுக் கொண்டன. இப்பாடசாலைகளே வலயமட்டப் பாடசாலைகளுக்கிடையேயான போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளன. (20)

# பயங்கரவாதத்திற்கெதிரான போராட்டத்தில் அமெரிக்காவுக்கு ஆதரவளிக்க வேண்டும்

## அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் அமெரிக்காவுக்கு நாம் ஆதரவளிக்க வேண்டும் என அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார். கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற "தென்னாசியாவில் அமெரிக்காவின் பங்களிப்பு" தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

சனநாயக ரீதியில் இன்னமும் அமெரிக்கா பலம் வாய்ந்த உறுதியான முதன்மை நாடாக உள்ளது. அமெரிக்காவும் அமெரிக்கர்களும் பயங்கரவாதத்துக்கெதிரான போராட்டத்தில் தாம் தனித்து விடப்பட்டுவிட்டதாக உணர அனுமதிக்கப்படக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## இரவில்..

அனுமதி வழங்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள தனது சொந்த வீட்டில் படையினரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவே குடியமர்ந்தபோதும். மாலை 6மணிக்குப் பின்னர் வீட்டில் தங்கக் கூடாது என படையினர் அச்சுறுத்தி வருகின்றனர். இதனால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன். இது தமது வாழ்வுரிமை மீறல் எனக் குற்றஞ்சாட்டியே இம்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (33)

## முகமாலை..

இ. இமையவன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இதேவேளை, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகமும், உதவி தெரிவத்தாட்சி அலுவலர் சி. நடராசா ஆகியோரும் அங்கு சமுகமளித்திருந்தனர்.

பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகி சுமார் ஒரு மணி நேரமாக இடம்பெற்ற இச்சந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் ஊடகவியலாளர்களிடையே பின்னர் விபரித்தார். அவருடன் உதவி தெரிவத்தாட்சி அலுவலர் சி. நடராஜாவும் அங்கு பிரசன்னமாகியிருந்தார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியைச் சேர்ந்த வாக்காளர்களுக்கான வாக்களிப்பு நிலையங்களை நிறுவுவது தொடர்பாக பொலிஸ் மற்றும் படைத்தரப்பின் ஆலோசனைகளுடன் முடிவுகளை எடுக்குமாறும், அவ்வாறு எடுக்கப்படும் முடிவுகளே தேர்தல் திணைக்களத்தின் முடிவாகவும் இருக்கும் எனத் தேர்தல் ஆணையாளர் கடித மூலம் தமக்கு அறிவித்திருந்ததாக யாழ். அரச அதிபர் அங்கு தெரிவித்தார். அவ் அறிவிப்பின் பிரகாரம் குறித்த கூட்டம் தம்மால் கூட்டப்பட்டிருந்ததாகவும் மேலும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள கிளிநொச்சியைச் சேர்ந்த 57 ஆயிரம் வாக்காளர்களும், வடமராட்சி கிழக்கின் தாழையடி முதல் சுண்டிக்குளம் வரையான பகுதியைச் சேர்ந்த 6,700 வாக்காளர்களுமாக மொத்தம் 63700 வாக்காளர்களும் வாக்களிக்க 61 வாக்களிப்பு நிலையங்களை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. குடாநாட்டினுள் வரும் பயணிகளை சோதனையிட அமைக்கப்பட்டிருக்கும் சோதனைச் சாவடிப் பகுதியில் 30 வாக்களிப்பு நிலையங்களும், அதேபோன்று குடாநாட்டிலிருந்து வெளியேறும் பயணிகளைச் சோதனைக்குட்படுத்தும் தடை முகாம் பகுதியில் 31 மாக வாக்களிப்பு நிலையங்களும் நிறுவப்படவுள்ளன.

வாக்களிப்பு' தினமான 2ஆம் திகதி காலை 7 மணி முதல் வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு வர அனுமதிக்கப்படுவர் எனவும், இராணுவம் அப்பகுதிகளில் நிலை கொண்டிருக்க மாட்டாதெனவும் ஆள் அடையாள அட்டைகளோ வேறு எந்த ஆவணங்களுமோ இன்றி எந்தவொரு சோதனை நடவடிக்கைக்கும் உட்படாது வாக்காளர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், பொதிகளை எடுத்து வர அன்றையதினம் எவரும் அனுமதிக்கப்படமாட்டார்களெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே தேர்தல் தினத்திற்கு முதல் நாளன்று நண்பகலுடன் குடாநாட்டினுள் பொதிகளை எடுத்துச் செல்லும் வாகனங்கள் தற்காலிகமாக அனுமதிக்கப்படமாட்டாதெனவும் அத்துடன் குடாநாட்டில் உள்ள வெளிமாவட்டத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் அந்தந்த மாவட்டங்களில் வாக்களிக்க ஏதுவாக முகமாலையூடாக அவர்கள் பயணிக்க மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அனுமதிக்கப்படுவர் எனவும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் வாக்களிப்பு நடவடிக்கைகளை சுலபமாக்க கிளிநொச்சி அரச அதிபர் விசேட பணிமனை ஒன்று தற்காலிகமாக அங்கு இயங்குமெனவும், வாக்காளர்கள் ஏற்றியிறக்கும் பணிக்கு கிளிநொச்சி அரச அதிபரே பொறுப்பாக இருப்பார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அவர்களை ஏற்றியிறக்குவதற்கான வாகனச் செலவுகளை தேர்தல் திணைக்களம் வழங்க முன்வந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. இச்செலவுகளுக்கென கிளிநொச்சி அதிபர் 53 இலட்சம் ருபா நிதியை கோரியுள்ளதாகவும் யாழ். அரச அதிபர் தெரிவித்தார். (27)

## அன்னைபூபதி..

அங்கு பொதுச்சுடரினை போராளி சாளரசி ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியினை காவல் துறை சீர்திருத்தப் பொறுப்பாளர் நரேன் ஏற்றிவைத்தார். தியாகி அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை காவல்துறை பிரதம பரிசோதகர் குணரட்ணம் ஏற்றிவைக்க திருவுருவப்படத்திற்கான மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் இடம்பெற்றது. அடுத்து நினைவுரைகள் இடம் பெற்றன.

அதேபோன்று கிளிநொச்சி பிரதேச அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயமுன்றலில் மேற்படி நினைவு நிகழ்வுகள் இடம் பெற்றன.

கிளிநொச்சி வர்த்தக சங்க செயலர் நவரட்ணராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநகர் வலயப்பொறுப்பாளர் திருமாறன் தமிழீழ தேசியக் கொடியினை ஏற்றிவைக்க திருவுருவப்படத்திற்கான ஈகச் சுடரேற்றல், மலர்மாலை, மலரஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றதுடன் நினைவுரைகளும் இடம் பெற்றன.

இதேவேளை உடையார்கட்டு மூங்கிலாற்றில் அமைந்துள்ள மட்டு- அம்பாறை மாவீரர் நினைவு மண்டபத்தில் மிகவும் உணர்வெழுச்சியுடன் நடை பெற்றது.

மட்டு-அம்பாறை தொடர்பகப் பொறுப்பாளர் ஐங்கரன் தலைமையில் காலை 09.00 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் பொது ஈகச்சுடரினை ஜெயந்தன் படையணி அரசியல் பொறுப்பாளர் ஜீவகுமார் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை ஜெயந்தன் படையணி நிர்வாகப் பொறுப்பாளர் எழுநிலவன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து அன்னை பூபதி அவர்களின் திருவுருவப்படத்திற்கு சரஸ்வதி அம்மா அவர்கள் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து மலர் வணக்கமும் செலுத்தினர் இந்நிகழ்வில் நினைவுரையினை ஜெயந்தன்படையணிப் போராளிகளான இராசு, வர்மன் ஆகியோர் நிகழ்த்தினர். (26)

## ஐ.நா...

ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் இப்பேரணியில் மக்கள் கலந்து கொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## இணைந்த...

எனவே வட-கிழக்கு தான் இணைந்த தமிழீழம் தமிழர்களுடைய தாயகம் என்பதில் எந்த விதமாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. அதே நிலைப்பாடுதான் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாடுமாகும்.

17700 இளைஞர்களை பலி கொடுத்தது கூட அந்த தமிழீழக் கொள்கைக்காகத்தான் தமிழீழம் என்பது அந்த இணைந்த வட-கிழக்கு என்பதை எவரும் மறந்து விடமுடியாது.

எனவேதான் இந்த அடிப்படைகொள்கைதான் என்னைப் பொறுத்தமட்டில்நான் கடைப்பிடித்து வருகின்ற கொள்கை. எனவே என்னுடைய கொள்கை யில் மாற்றம் கிடையாது இன்று கூட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினுடைய கொள்கை ரீதியான நான்கு அம்சக்கோரிக்கையை வைத்தே என்னுடைய தேர்தல் பிரச்சாரத்தை செய்கின்றேன்.

இதேவேளை மாவட்ட அபிவிருத்திஎன்று வரும்போது என்னுடைய 100வீத ஆதரவு அதற்கு இருக்கிறது எனத்தெரிவித்த ஜேசப்பரராஜசிங்கம் கொள்கையோடு அபிவிருத்தி யை கலப்பது அவ்வளவு உகந்ததல்ல. அபிவிருத்திவேறு கொள்கைவேறு.

எனவேதான் கொள்கைஅடிப்படைகொள்கையாக இருக்க வேண்டும். அதேநேரத்தில் அபிவிருத்தி என்று வரும்போது அதற்கு பிரதேச ரீதியான அணுகு முறைதேவை என்பதில் 100வீதம் அதற்கு ஆதரவாக இருக்கிறேன் எனவும் தெரிவித்தார்.

## அன்னை...

தலைமையையும் அழிப்பதற்காக இலட்சக்கணக்கான படைகளை குவித்து எம் மக்களின் விடுதலை உணர்வுகளை மழுங்கடித்து விடுதலைப் போராட்டத்தை அழித்து விடலாம் என்று கனவு கண்டார்கள்.

எமது தாயக விடுதலைப்போராட்டத்தை அழிப்பதாகக் கூறிக்கொண்டு எமது மக்களை சொல்லொணாத் துயரங்களுக்குள்ளாக்கினார்கள். அந்த வரிசையில் மட்டக்களப்பிலும் பலபடுகொலைகள் நடந்தன. குறிப்பாக பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார்கள். இந்திய இராணுவத்தின் இத்தகைய கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகரிப்பதை கண்ணுற்ற அன்னையர் முன்னணியினர் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். யுத்த நிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டும். எனும் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து அடையாள உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்கள்.

அன்னையர் முன்னணியின் இத்தகைய அடையாள உண்ணாவிரதத்துக்கு மக்கள் ஆயிரக்கணக்காக ஒன்று திரண்டு ஆதரவளித்து அந்த உண்ணாவிரதத்திலே வந்து கலந்து கொண்டார்கள். எமது இளைஞர்கள், யுவதிகள் தினமும் இந்தியப்படைகளின் பலிக்கு இரையாவதைக் கண்ணுற்ற அன்னையர் முன்னணியினர் தமது அடையாள உண்ணாவிரதத்தை சாகும் வரை உண்ணாவிரதமாக மாற்றினார்கள். சாகும் வரையிலான உண்ணாவிரதத்திலே நான் முந்தி நீ முந்தி எனப் போட்டிபோட்டார்கள்.

அந்த வகையிலே அன்னம்மா டேவிட் முதலில் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். அன்னம்மா டேவிட் தமக கெதிராக சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பதை விரும்பாத இந்தியப்படைகள் அவரின் பிள்ளையைப் பிடித்து அவர்களின் பிள்ளைகளிடம் அன்னையின் உண்ணாவிரதத்தை கொச்சைப்படுத்தும் படியாக கடிதங்களை வாங்கி வஞ்சகமாக அன்னம்மா டேவிட்டை தூக்கிச்சென்றார்கள். அன்னை பூபதி கொதித்தெழுந்தார். தன்கைப்படவே தான் தன் மக்களுக்காக மக்களின் விடுதலைக்காக சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப்போகின்றேன் நான் நினைவிழந்து போகின்ற நிலையில் கூட என்னை காப்பாற்றவோ குறித்த இடத்தில் இருந்து வேறு இடத்துக்கு தூக்கிச்செல்லவோ கூடாது என உறுதியாக அந்தக்கடிதத்தில் எழுதியிருந்தார்.

அன்னையின் உண்ணாவிரதத்திற்கு மக்கள் அலை போல் திரண்டு ஆதரவளித்தனர். அன்னை பூபதி நினைவிழந்து போகின்ற நிலையிலும் கூட மீண்டும் ஒரு தந்திரோபாய முயற்சியை இந்திய இராணுவம் மேற்கொண்டது. மாற்றுக்கட்சிகள் அன்னை பூபதியை தூக்கிச் செல்லப்போகிறார்கள் என்ற வதந்தியைக் கிளப்பி விட்டு அந்தக் குந்த மரநிழலில் இராணுவம் சுற்றி வளைத்து நிலை எடுத்து நின்றது. தமதுஇத்தகைய செயற்பாட்டால் ஒரு பயப்பீதியை கிளப்பி விட்டு மக்களின் உணர்வுகளை மழுங்கடித்து விடலாம் என்று இந்தியப்படைகள் கனவு கண்டன. அன்னை பூபதி அசையவில்லை. சாகப்போகும் நிலையிலும் தனது உறுதியை முணுமுணுத்த வாயால் சொல்லிக் கொண்டே இருந்தாள். இறுதி வரை அன்னை தான் கொண்ட இலட்சியத்தில் உறுதியாக இருந்து தான் நேசித்த மக்களுக்காக தனது இன்னுயிரை தியாகம் செய்துகொண்டாள்.

அன்னை பூபதியின் தியாகம் மலர்ந்திருக்கின்ற மாமாங்கத்திருத்தலத்திலே இன்று ஒரு துரோகத்தனம் முளைவிட்டிருக்கிறது. இந்த துரோகத்தனத்துக்கு துணை போவதற்கு மக்கள் தயாராக இல்லாத போதிலும் ஆயுத முனையில் அங்கே மக்களை பயன்படுத்துகின்ற ஒரு அவல நிலை நிகழ்ந்து கொண்டிருக்கிறது. எமது மக்கள் எமது தலைமையிலும் விடுதலைப்போராட்டத்திலும் கொண்டிருக்கிற உறுதியான பற்றையும் பாசத்தையும் எப்போதும் இந்த துரோகத்தனங்களால் வென்றுவிட முடியாது என்பது உறுதி.

இந்த நிலையில் துரோகத்தனம் வெகுவிரைவில் முறியடிக்கப்பட்டு எமது தலைவர் தாயக விடுதலைப்போராட்டத்தை தொடர்ந்து நடத்துவார். என்பது எமது உறுதியான நம்பிக்கை. எமது விடுதலைப்போராட்டத்தை நெருக்கடியான காலகட்டங்களில் விலைமதிப்பற்ற அளவிடமுடியாத பெரும் தியாகங்களைப் புரிந்து இந்த விடுதலைப்போராட்டத்தை நிமிர்த்தி விட்டார்களோ அதே போன்று இந்த மக்களும் போராட்டத்தின் நெருக்கடியான காலகட்டங்களில் எல்லாம் தம்மை அர்ப்பணித்து எம்மை நிமிர்த்தி விட்டார்கள். அவ்வாறு என்றுமே செயற்பட வேண்டும்.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட மக்கள் எமது தேசியத் தலைமையையும் அதன் கொள்கைகளையும் ஏற்று நின்றுதான் இந்த விடுதலைப்பேராட்டத்துக்கு ஆதரவளித்தார்கள். இன்றும் எமது தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களையும் அவரது கொள்கைகளையும் ஏற்று நின்று துரோகத்தனங்களுக்கு துணை போகாது எமது தேசியத்தலைமையின் கீழ் அணிதிரள தயாராக இருக்கின்றார்கள் தயாராகிக்கொண்டிருக்கின்றார்கள். விரைவிலே துரோகத்தனம் முடிவிற்கு கொண்டுவரப்படும். நிச்சயமாக மட்டு-அம்பாறை மாவட்டத்துக்கு ஏற்பட்ட அவமானமும் கறையையும் நீக்கிமீண்டும் ஒரு உறுதிமிக்க மக்களாக தேசியத்தலைவரின் கீழ் அணிதிரள்வார்கள் என்பதை உறுதியாக கூறிவைக்க விரும்புகிறேன் எனவும் தெரிவித்தார்.

தமிழ் ஊடக இணையத்தின் தாயகத்துக்கான பொறுப்பாளர் மிரேஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரை மட்டு-அம்பாறை அரசியல் துறைப்பொறுப்பாளர் கௌசல்யன் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக்கொடியை விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கரிகாலன் ஏற்றிவைத்தார். மாவீரர் பொது நினைவுத் தூபிக்கான மலர்மாலையை மூன்று மாவீரர்களின் தந்தையான நல்ல தம்பி அணிவித்தார். பூபதி அவர்களின் உருவப்படத்திற்கான சுடர்களை வெளிநாட்டில் புலம்பெயர்ந்து வாழும் விஸ்வேந்திரா, ராஜரட்ணம் ஆகியோர் ஏற்றினர்.இதற்கான மலர்மாலையை கரும்புலி மாவீரர் மலர்விழியின் தந்தையான பாலகிஸ்ணன் அணிவித்தார். அடுத்து தூயவன் அரசறிவியல் கல்லூரி போராளி நாவேந்தன் அன்னை பூபதி நினைவுக்கவிதை வாசித்தார். சிறப்புரையை விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் கரிகாலன் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் பொறுப்பாளர்கள், போராளிகள், பொது மக்கள் என பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர். (லோ,பி)


கிளிநொச்சி மருத்துவ சங்கம்
அங்குரார்ப்பண வைபவம்-2004

இடம் :- 1-9 நங்ககம், கிளிநொச்சி
காலம் :- 21-03-2004 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- காலை 10.00 மணி தொடக்கம்

பிரதம விருந்தினர்: டாக்டர் திருமதி ஒஜ. கணேசமூர்த்தி
விசேட வைத்திய நிபுணர்,
தலைவி, மருத்துவத்துறை,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

விழா அனுசரணை
நீலன் மருந்தகம்
A-9 வீதி, கிளிநொச்சி.
(கி-9426)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.